


34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 பாலம்: 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2024

# மூன்றாவது முறை இந்தியாவின் பிரதமரானார் நரேந்திர மோடி

மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி 2024 ஜூன் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை புது டெல்லியில் உள்ள அதிபர் மாளிகை யில் இந்தியாவின் அதிபர் திரௌபதி முர்மு (Droupadi Murmu) முன்னிலை யில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி யேற்றார். இந்திய வரலாற்றில் தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்ற இரண்டாவது பிரதமர் நரேந்திர மோடி. இதற்கு முன்னர் ஜவஹர்லால் நேரு மூன்று முறை தொடர்ந்து பிரதமராக வந்திருந்தார்.

பல தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர். அவர்கள்: இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்க, வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசீனா (Sheikh Hasina), நேபாள பிரதமர் புஷ்பா கமல் தஹால் (Pushpa Kamal Dahal) மற்றும் மாலைதீவு அதிபர் மொஹமட் முய்சு (Mohamed Muizzu) ஆவர்.

இப்பதவியேற்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடியுடன் சேர்ந்து 71 அமைச்சர்களும் பதவியேற்றனர். இவர்களில் 30பேர் மட்டுமே நாடாளுமன்ற சபை அமைச்சர்களாவர். (Cabinet Minister), மேலும் ஐவர் சுயேச்சையாக இயங்கும் இராஜாங்க அமைச்சர்கள். (Minister of state with independent charge). மீதமுள்ள 36 பேரும் நாடாளு மன்ற சபை அமைச்சிற்குரிய துணை அமைச்சர்கள்.

இந்திய அரசியலமைப்பின்படி அமைச்சர்களின் எண்ணிக்கை இந்திய நாடாளு மன்ற கீழ்சபை (Lok sabha) உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15%இற்கு மேற்படக்கூடாது. அத்துடன் அமைச்சராக நியமிக்கப்படுபவர் கட்டாயமாக நாடாளுமன்றத்தின் கீழ்சபை அல்லது மேற்சபை (Rajya sabha) உறுப்பினராக இருக்க வேண்டும்.

அமைச்சர்களாகப் பதவியேற்றவர்களில் பலர் ஏற்கனவே நரேந்திர மோடியின் அமைச்சரவையில் இருந்தவர்கள். உள்துறை மற்றும் ஒத்துழைப்புத்துறை அமைச்சராக அமித் ஷா (Amit Shah), பாதுகாப்புத்துறை அமைச்சராக ராஜ்நாத் சிங் (Rajnath Singh), வெளியுறவுத்துறை அமைச்சராக சுப்பிரமணியம் ஜெய்சங்கர் (Subrahmaniyam Jaishankar), மற்றும் நிதித்துறை மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சராக நிர்மலா சீதாராமன் (Nirmala Sitharaman) பதவியேற்றுள்ளனர்.



இந்திய நாடாளுமன்றத்தின் 543 உறுப்பினர்களைக் கொண்ட கீழ்சபைக்கு 7 கட்டங்களாக வாக்குப்பதிவு ஏப்ரல் 19ஆம் திகதியில் இருந்து ஜூன் 01ஆம் திகதிவரை 44 நாட்களாக நடைபெற்றது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக முறையில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் 969 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 642 மில்லியன் மக்கள் அதாவது 66%மானோர் வாக்களித்திருந்தனர். இவர்களில் 312 மில்லியன் பெண்கள் ஆவர். இந்தியாவின் சனத்தொகை 1,400 மில்லியன். அதில் 70%மானோர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இந்தியாவில் 2,660 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இருக்கின்றன. அத்துடன் தேர்தலில் வாக்களிக்கும் நிலையங்களும் ஒரு மில்லியன் இருந்தன. இந்தியா முழுவதும் 28 மாநிலங்களும் 8 பிரதேச சங்களும் உள்ளன. இந்த 36 இடங்களில் இருந்து 543 உறுப்பினர்களை மக்கள் இந்திய நாடாளுமன்றத்தின் கீழ்சபைக்குத் தெரிவு செய்வர். அத்துடன் ஆங்கில-இந்திய (Anglo-Indian) சமூகத்தின் சார்பில் இந்திய அதிபர் 2 உறுப்பினர்களை கீழ்சபைக்கு நியமிப்பார். மொத்தமாக 545 உறுப்பினர்கள் கீழ்ச்சபையில் அங்கம் வகிப்பர். கீழ்சபை உறுப்பினராவதற்கு ஒருவருக்கு குறைந்தது 25 வயதாக இருக்கவேண்டும்.

73 வயதான நரேந்திர மோடியின் தலைமையில் பாரதிய ஜனதா கட்சி (BJP) ஏனைய 39 கட்சிகளுடன் சேர்ந்து இத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) என்ற பெயரில் போட்டியிட்டனர்.

82 வயதான மல்லிகார்ஜுன் கார்கே (Mallikarjun Kharge) தலைமையில் இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி (INDIA) என்ற பெயரில் இந்திய தேசிய காங்கிரஸ் (INC) ஏனைய 39 கட்சிகளுடன் சேர்ந்து இத்தேர்தலில் போட்டியிட்டது. இவ்விரண்டு கூட்டணிக் கட்சிகளைவிட பல கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளில் ஆறு கட்சிகள் மட்டுமே தேசிய அளவிலான கட்சிகளாகும். இவற்றில் ஐந்து கட்சிகள் மேற்கூறிய NDA அல்லது INDIA கூட்டணியில் அங்கம் வகித்தன. பகுஜன சமாஜ் கட்சி (BSP) மட்டும் தனித்துப் போட்டியிட்டது. பகுஜன சமாஜ் கட்சி 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத்திற்கான கீழ்சபை தேர்தலில் 10 ஆசனங்களைப் பெற்றிருந்தது. 2024ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் ஒரு ஆசனத்தையும் பெறவில்லை.

தொடர்ச்சி 05 பக்கம்


















# HomeLife/GTA

## REALM SEMINAR







To

Join Our Company

Please Call -416-321-6969

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# பரபரப்பாகும் அரசியல் களம் – அடுத்து என்ன?

**- அரவின் -**

கொழும்பு அரசியல் களத்தில் அடுத்து வரும் நாட்களில் ஆச்சரியங்கள் நிகழ்வதற்கான சூழலே, இந்தப் பத்தி எழுதப்படும்போது காணப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் சூழலில், சஜித் பிரேமதாச, அனுரகுமார திசநாயக்க ஆகிய இருவர் மட்டும்தான், தங்களை வேட்பாளர்களாகப் பகிரங்கப் படுத்தி இருக்கின்றனர். அதனை முன்னிறுத்தி பிரச்சாரங்களையும் தொடங்கியுள்ளனர். அவர்களை வேட்பாளர்களாக, அவர்களின் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தேர்தலில் போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. முன்னர் அவர் தேசிய வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று அந்தக் கட்சி கூறியது. இப்போது அவர் சுயேச்சை வேட்பாளராகவே போட்டியிடுவார் என்று கூறுகிறது.

யானை சின்னத்தில் அவர் போட்டியிடப் போவதில்லை, சுயேட்சை சின்னத்தில்தான் களமிறங்குவார் என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ, ஜனாதிபதி தேர்தலில் எந்த கட்சியில் அல்லது எந்த சின்னத்தில் போட்டியிடப் போகிறேன் என, இந்தப் பத்தி எழுதப்படும் வரையில் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

விக்கிரமசிங்க கடைசியாக ராஜபக்சவினருடன் நடத்திய சந்திப்பின்போது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தனது முடிவை அறிவிப்பதற்கு வழங்கிய காலக்கெடு இந்த மாத நடுப்பகுதியுடன் நிறைவடைகிறது. எனவே அவர் எந்த நேரத்திலும் தனது முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விளம்பரம்
VLAMBARAM™
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave. E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கப் போகும் முடிவு என்ன? அவர் ராஜபக்சவினரின் பின்னால் ஒளிந்து கொள்ளப் போகிறாரா? இல்லை, அவர் ராஜபக்சவினருக்குக் கைகாட்டிவிட்டு, தனி வழியில் செல்லப் போகிறாரா? இதுதான் இப்போது உள்ளமில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி. ராஜபக்சவினரின் துணையுடன் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கும் திட்டம் ராஜபக்சவினருக்கு இருந்தது, இப்போதும் இருக்கிறது.

தங்கள் தரப்பில் போட்டியிடுவதற்குப் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்ச மிக அண்மையில்கூடக் கூறியிருந்தார்.



தங்களிடம் வேட்பாளர்கள் பலர் இருந்தாலும்கூட, மிகப் பொருத்தமானவர் இல்லை என்பது ராஜபக்சவினரின் கருத்து. அவ்வாறான நிலையில் அவர்கள் அதிகம் நம்பி இருந்தது, இருப்பது, ரணில் விக்கிரமசிங்கவைத்தான்.

அவரைத் தங்களின் கைக்குள் வைத்துக் கொண்டு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியை நடத்துவதற்குத் திட்டமிட்டனர்.

நாமல் ராஜபக்சவை ஜனாதிபதிப் பதவிக்குத் தயார்படுத்தும்வரையில், ரணில் விக்கிரமசிங்கவை தங்களின் கட்டுக்குள் வைத்திருப்பதுதான் அவர்களின் திட்டம்.

அதனை மையப்படுத்தியே மகிந்த ராஜபக்சவும் பசில் ராஜபக்சவும் பேச்சுக்களை முன்னெடுத்து வந்தனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க, இதுவரையில் அவர்களுக்குச் சரியான பதிலை வழங்கவில்லை.

அவர்களுக்குப் பிடி கொடுக்காமலேயே காய்களை நகர்த்தி வந்தார். ராஜபக்ஷவினரின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டால் என்ன நடக்கும் என்பது அவருக்குத் தெரியும்.

கடைசிவரை அவர்களின் பிடிக்குள் அகப்படாமல் தனது திட்டத்தை நகர்த்திச் செல்ல முற்படுகிறார் அவர். ஆனால் ரணிலின் இந்தக் காய் நகர்த்தல் நீண்டகாலத்துக்குத் தாக்குப்பிடிக்காது. அது முடிவுக்கு வரும் கால எல்லை நெருங்கி விட்டதாகவே தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்க இந்த மாத நடுப்பகுதியில் தனது முடிவை அறிவிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். அதனை அவர் நிறைவேற்ற வேண்டும்.

அதைவிட அடுத்த சில வாரங்களில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளில் தேர்தல் ஆணைக்குழு இறங்கக்கூடிய சூழல் உள்ளது. எனவே அவர் காலத்தை இழுத்தடிக்காமல் தனது முடிவை எந்த நேரத்திலும் அறிவிக்கக்கூடும்.

ராஜபக்சவினரைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்க தங்களின் கட்சியின் வேட்பாளராக பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும். அதனை அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

மகிந்த ராஜபக்சவும் சரி, பசில் ராஜபக்சவும் சரி ஏனைய தலைவர்களும் சரி, பொதுஜன பெரமுன நிச்சயம் போட்டியிடும், வாக்குச் சீட்டில் மொட்டுச் சின்னம் நிச்சயமாக இடம்பெறும் என்று கூறி வருவதை அவதானித்திருப்பீர்கள். அதன் அடிப்படை இதுதான்.

யார் வேட்பாளர் என்பதைவிட மொட்டுச் சின்னத்தில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் போட்டியிட வேண்டும், அவரை வெற்றிபெற வைக்க வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு.

இந்த இலக்கிற்குள், ரணில் விக்கிரமசிங்க அகப்படாமல் நழுவிக் கொண்டால் என்ன நடக்கும்? ராஜபக்சவினர் மாற்றுத் திட்டத்தை வைத்திருக்கின்றனரா? அவர்கள் வேறு ஒரு வேட்பாளரை நிறுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றனரா? இவை எல்லாம் இப்போது மிகப் பெறுமதி யான கேள்விகளாக இருக்கின்றன.

தங்களிடம் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்று கூறியபோதும், வேட்பாளர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர் என்பதை அவர்கள் கூறியிருந்தனர். அதேவேளை, நாமல் ராஜபக்ச ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் அளவுக்கு இன்னமும் தகுதி பெறவில்லை என்று மகிந்த ராஜபக்சவே கூறிவிட்டார்.

ஆனால் கடந்த 7ஆம் திகதி நடந்த பொதுஜன பெரமுனவின் செயற்குழுக் கூட்டத்தில் யாரும் போட்டியிட முன்வராது போனால், தான் போட்டியிடத் தயார் என்று நாமல் ராஜபக்ச அறிவித்துள்ளார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனால் நாமல் ராஜபக்சவை போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ச அனுமதிப்பாரா என்பதுதான் முக்கியமான பிரச்சினை.

அவருக்கு இப்போது இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன. ஒன்று, வெல்ல முடியாத களத்தில் நாமல் ராஜபக்சவைக் களம் இறக்கி, அவரது எதிர்காலத்தைப் பாழாக்கி விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை.

பொதுஜன பெரமுன இப்போது மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது. இந்த நிலையில் நாமலைக் களமிறக்கி, அவர் தோல்வி அடையும் சூழல் ஏற்பட்டால், எதிர்காலத்தில் அவரது அரசியல் வளர்ச்சி பாதிக்கப்படும்.

தனக்குப் பின்னர் நாமலின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும் என விரும்புகின்ற மகிந்த ராஜபக்ச அவரை ஆபத்தான அரசியல் விளையாட்டில் இறக்குவதற்கு விரும்பமாட்டார்.

அடுத்து, மகிந்த ராஜபக்ச தனது வாயினால் நாமல் ராஜபக்ச இன்னமும் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடும் அளவுக்குத் தகுதி பெறவில்லை என்று கூறிவிட்டார்.

இதற்குப் பிறகு அவரைத் தகுதியான வேட்பாளர் என்று மகிந்த ராஜபக்சவினால் பிரச்சாரம் செய்ய முடியாது.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்சவின் பிடிக்குள் அகப்படாமல் சுயாதீனமாகக் களம் இறங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானிப்பாரேயானால் பொதுஜன பெரமுன என்ன முடிவை எடுக்கப் போகிறது? யாரை வேட்பாளராக இறக்கப் போகிறது?

அவ்வாறான நிலை உருவானால் பிரதான மூன்று போட்டியாளர்கள் என்று இருந்த நிலை, நான்காகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ அதிகரிக்கக்கூடும்.

அது அரசியலில் பல குழப்பங்களையும் உருவாக்கக்கூடும்.



# பிரதமரானார்

01ஆம் பக்கத்தொடர்ச்சி


Prime Minister Narendra Modi

**2024இல் நடைபெற்ற தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) பெற்ற ஆசனங்களின் விபரம்.**

| | |
|---|---|
| பாரதிய ஜனதா கட்சி (BJP) | 240 |
| தெலுங்கு தேசம் கட்சி (TDP) | 16 |
| ஜனதா தளம் (ஐக்கிய) (JD(U)) | 12 |
| சிவசேனா (SS) | 7 |
| லோக் ஜனசக்தி கட்சி (ராம்விலாஸ்) (LJP) | 5 |
| ராஷ்டிரிய லோக் தளம் (RLD) | 2 |
| ஜனதா தளம்(மதசார்பற்ற) (JD(S)) | 2 |
| ஜனசேனா கட்சி (JSP) | 2 |
| ஏனைய 7 கட்சிகள் தலா ஓர் ஆசனம் | 7 |
| மொத்தமாக தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) | 293 |

**2024இல் நடைபெற்ற தேர்தலில் இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி (INDIA) பெற்ற ஆசனங்களின் விபரம்.**

| | |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸ் (INC) | 99 |
| சமாஜ்வாடி கட்சி (SP) | 37 |
| அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் (AITC) | 29 |
| திராவிட முன்னேற்றக் கழகம் (DMK) | 22 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) (CPI(M)) | 4 |
| ராஷ்ட்ரிய ஜனதா தளம் (RJD) | 4 |
| சிவசேனா (உத்தவ் பாலாசாகேப் தாக்கரே) (SS) | 9 |
| ஆம் ஆத்மி கட்சி (ARP) | 3 |
| தேசியவாத காங்கிரஸ் கட்சி (சரத்சந்திர பவார்) (NCPSP) | 8 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) | 2 |
| ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா (JHM) | 3 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) (CPI (ML)) | 2 |
| இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (IUML) | 3 |
| ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாடு (JKNC) | 2 |
| விடுதலை சிறுத்தைகள் கட்சி (VCK) | 2 |
| ஏனைய 5 கட்சிகள் தலா ஓர் ஆசனம் | 5 |
| மொத்தமாக இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி (INDIA) | 234 |

**மேலே குறிப்பிட்டு இவ்விரண்டு கூட்டணியிலும் சேராத ஏனைய கட்சிகள் பெற்ற ஆசனங்களின் விபரம்**

| | |
|---|---|
| YSR காங்கிரஸ் கட்சி (INC) | 4 |
| ஏனைய 5 கட்சிகள் தலா ஓர் ஆசனம் | 5 |
| சுயேச்சை உறுப்பினர்கள் | 7 |
| மொத்த ஆசனங்கள் | 16 |


Prime Minister Narendra Modi is garlanded by senior BJP leaders

2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி (BJP)இனுடை கூட்டணி 353 ஆசனங்களைப் பெற்றிருந்தது. அதில் பாரதிய ஜனதா கட்சி (BJP) தனித்து 303 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

அத்தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் (INC)இனுடைய கூட்டணி 91 ஆசனங்களைப் பெற்றிருந்தது. அதில் இந்திய தேசிய காங்கிரஸ் (INC) தனித்து 52 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

2019ஆம் ஆண்டில் பெரும்பான்மை ஆட்சியமைக்கத் தேவையான 272 ஆசனங்களையும் BJP தனித்தே பெற்றிருந்தது. 2024இல் BJP தனித்து 240 ஆசனங்களை மட்டுமே பெற்றது. ஆனாலும், BJP கூட்டணி 293 ஆசனங்களைப் பெற்றபடியால் BJP கூட்டணியான NDA அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான 272இற்கு மேல் ஆசனங்களை வைத்திருப்பதால் NDA கூட்டணி பெரும்பான்மை அரசை அமைக்கிறது. அக்கூட்டணியின் தலைவராக BJPயைச் சேர்ந்த நரேந்திர மோடி அவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


Priyanka Gandhi and Rahul Gandhi Thank You: NDTV

BJP கட்சி 2019ஆம் ஆண்டில் பெற்ற 303 ஆசனங்களில் இருந்து 63 ஆசனங்களை 2024ஆம் ஆண்டில் இழந்துள்ளது. BJP 2019ஆம் ஆண்டில் 37.4%ஆன வாக்குகளைப் (229 மில்லியன்) பெற்றது. 2024ஆம் ஆண்டில் 36.6%ஆன வாக்குகளைப் (236 மில்லியன்) பெற்றுள்ளது.

INC கட்சி 2019ஆம் ஆண்டில் பெற்ற 52 ஆசனங்களைவிட 2024ஆம் ஆண்டில் 47 அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றுள்ளது. INC, 2019ஆம் ஆண்டில் 19.5%ஆன வாக்குகளைப் (119 மில்லியன்) பெற்றது. 2024ஆம் ஆண்டில் 21.2%ஆன வாக்குகளைப் (137 மில்லியன்) பெற்றுள்ளது.

இந்தியா முழுவதிலும் உள்ள மாநிலங்களும் பிரதேசங்களுமான 36 இடங்களில் NDA கூட்டணி 17 இடங்களிலும், INDIA கூட்டணி 11 இடங்களிலும், ஏனைய கட்சிகள் 2 இடங்களிலும் வந்துள்ளன. 6 இடங்களில் இரண்டு கூட்டணியும் சம உறுப்பினர்களைப் பெற்றுள்ளன.

இந்திய நாடாளுமன்றத்தில் மேற்சபையில் (Rajya Sabha)இல் தற்போது 245 ஆசனங்கள் உள்ளன. அவற்றில் 233 பிரதிநிதிகள் மாநில சட்டசபைகளால் தெரிவு செய்யப்படுவர். 12 பிரதிநிதிகள் இந்திய அதிபரால் நியமிக்கப்படுவர். இந்த 245 உறுப்பினர்களுக்கும் உரிய பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். மேற்சபை உறுப்பினராக இருப்பதற்கு ஒருவருக்கு 30 வயதிற்குமேல் இருக்க வேண்டும்.

கீழ்சபையைப் போல் மேற்சபைக்கு எல்லா உறுப்பினர்களையும் ஒரு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவது இல்லை. மேற்சபை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினரின் பதவிக்காலம் இரட்டை எண்ணில் வரும் ஆண்டுகளில் நிறைவு பெறும். இதனால், 2024இல் 78பேர் புதிதாக மேற்சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். மீதமுள்ள 78பேரின் பதவி 2026இலும் மிகுதி 77பேரின் பதவி 2028இலும் நிறைவுறும்போது புதிய தெரிவு நடைபெறும்.


MK Stalin and Congress leader Rahul Gandhi

2024ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட மேற்சபை உறுப்பினர்களுடன் தற்போது மேற்சபையில் உள்ள உறுப்பினர்களது விபரம்.

பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் 97பேர் உட்பட தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மொத்தம் 119 உறுப்பினர்கள் மேற்சபையில் உள்ளனர். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் 29பேர் உட்பட இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணியில் மொத்தமாக 92 உறுப்பினர்கள் மேற்சபையில் உள்ளனர்.

இந்த இரண்டு கூட்டணியிலும் சேராதவர்களாக 29 உறுப்பினர்கள் மேற்சபையில் உள்ளனர். மீதமுள்ள 5 உறுப்பினர்களுடைய ஆசனங்கள் தற்போது வெற்றிடமாக உள்ளன.




# மலர்த் தோட்டம்

இன்றைய குளிர்காலக் காற்றின் அளவீடு
பூஜ்ஜியத்தின் கீழே
இருபது கணிப்பிடும் காலநிலையில்;

சாளரத்தின் திரைச்சீலையை மெதுவாக
நீக்கி வெளி உலகை
அவதானிக்கின்றேன்.

சூரியனை உண்டு பசியாறிய மேகம்
அமைதியாகப் பனிப்பூக்களைப் பறித்து
பூமியின் வட பிராந்தியக் கூடைக்குள்ளே
ஒவ்வொன்றாக நிரப்பியவாறு நேரத்தை
வியர்வை மணிக்கூட்டில் அளந்து
உழைப்புக் கடமையில் ஈடுபடுகின்றது.

வண்ணத்திப் பூச்சிகளாக புறாக்களாக
வட்டமிடும் தும்பிகளாக
கொக்குகளாக கிளிகளாக குருவிகளாக
காற்றடிக்கும் திசையில்
பனிமலர் இதழ்கள் சிறகடிக்கின்றன.

உபரி எடையை, கொழுப்பை
மட்டுப்படுத்தி, இளமையை அழகை
இழுத்துப் பிடிக்கும் முயற்சியில்
முன்வீட்டுத் தலைவாசலில் நின்றவாறு
உடம்பை மூடிய மனித உருவமொன்று
கைகால் அசைத்து உடற்பயிற்சியில்



நேரத்தைக் கடத்துகின்றது.

செய்த நன்றியின் மனப்பதிவை
ஐந்தறிவால் காட்டுகின்ற
அருமையான வளர்ப்பு நாய்களுடன்
ஆண்கள் பெண்கள்
குறுநடை, வேகநடை போகின்றனர்.

குளிர் உடை அணிந்த முகிற் கூட்டம்
இயற்கையின் இனிய நிகழ்வுகளை
ரசித்தவாறு, பல இன மலர்களால்
பூசை செய்துகொண்டு உலக
அன்னையை வணங்கியவண்ணம்
அசைந்து செல்கின்றது.



**முத்துராஜா**

# வலுப்பெறும் சிவில் சமூக கட்டமைப்பு

– முகிலன் –

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஒவ்வொரு நிலைப்பாடுகளில் தமிழ்க் கட்சிகள் இருக்கின்ற சூழலில், தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பது குழப்பமான நிலையே நீடித்து வருகிறது.

இப்போது தமிழர் தரப்பில் ஜனாதிபதித் தேர்தலை அணுகுவது தொடர்பாக மூன்று நிலைப்பாடு காணப்படுகின்றன.

முதலாவது தரப்பு, தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகள், அபிலாசைகளை வெளிக்கொண்டுவரும், முயற்சியில் இறங்கி இருக்கிறது.

இதற்காகப் பலதரப்புகள் ஒன்றிணைந்திருக்கின்றன. இதனைப் பலப்படுத்துகின்ற முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இரண்டாவது தரப்பு, தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறது. இந்த நிலைப்பாட்டில் இருக்கின்ற ஒரே கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். ஏற்கனவே அது சில இடங்களில் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கத் தொடங்கி இருக்கிறது.

இது பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியைத் தடுக்கின்ற, அதற்கு எதிராகக் கருத்துக்களை உருவாக்குகின்ற ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

மூன்றாவது தரப்பு, ஒன்றில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் இருக்கிறது அல்லது சஜித் பிரேமதாசவுடன் இணையும் திட்டத்துடன் இருக்கிறது.

சிலர் ஏற்கனவே முடிவெடுத்து விட்டனர். இன்னும் சிலர் முடிவெடுக்க முடியாமல் இருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தீர்மானம் எடுப்போம் என்கின்றனர். யார் யார் வேட்பாளர் என்று தெரிந்த பின்னர் தீர்மானிக்கலாம் என்கின்றனர். பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளைப் பார்த்த பின்னர் முடிவெடுப்போம் என்கின்றனர்.

மொத்தத்தில் இவர்களின் நிலைப்பாடு, முதல் இரண்டு தெரிவுகளையும் புறம் தள்ளி, யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் வாக்குகளைத் திரட்டிக் கொடுப்பதாகவே இருக்கிறது.

பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற தரப்புகளுக்



குள்ளேயும் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன. குழப்பங்கள் இருக்கின்றன. தெளிவற்ற நிலைப்பாடுகளும் இருக்கின்றன.

ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் வெளியிட்டிருக்கின்ற கருத்து, அதற்கு அண்மைய ஓர் உதாரணமாகும்.

அவர் "பிரபாகரன் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சிதைத்து சின்னாபின்னமாக்கியவர்கள் தமிழ் மக்களை ஒன்றுபடுத்தப் போகிறார்களாம்" என்று பொது வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சி தொடர்பாக விசனத்துடன் கருத்தை வெளியிட்டிருந்தார்.

அவரது அந்தக் கருத்து வெளியான ஓரிரு நாட்களின் பின்னர் ரெலோவின் மத்திய குழு மட்டக்களப்பில் கூடி, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக முடிவெடுத்திருக்கிறது.

அதற்குப் பிறகு புளொட் அமைப்பின் செயலாளர் பத்மநாதன் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில், தங்களது கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருந்தது.

தமிழ் பொது வேட்பாளர் ஆதரிப்பது என்ற விடயத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஐந்து கட்சிகளும் ஒற்றுமையாக இருப்பதாகக் கூறப்பட்டபோதும், அதில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல். எவ், தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன இன்னமும் இவ்வாறான முடிவை தங்களின் கட்சிகளுக்குள் எடுத்து அதனை வெளிப்படுத்தவில்லை.

அதுபோலவே சீ.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாடும் வெளிப்படுத்தப்படவில்லை.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகள், தங்களின் உட்கட்சி விருப்பங்களை வெளிப்படுத்திய பின்னரே, இதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் திட்டத்துடன் சிவில் சமூக அமைப்புக்கள் இருக்கின்றன.

இந்தப் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சிகள் தொடர்பாக வவுனியாவில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடுத்து யாழ்ப்பாணத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் இரண்டாவது கூட்டத்தை நடத்தியிருந்தன.

அந்தக் கூட்டத்தில்தான் அரசியல் கட்சிகளின் தீர்மானம் வெளிவந்த பின்னர் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான முயற்சிகளில் இறங்கப் போவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில், தமிழ் சிவில் சமூக அமைப்புகளை, பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவுக்கு, தமிழ் மக்கள் பொதுச் சபை என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் பொதுச்சபையில் மதப் பிரமுகர்கள் இடம்பெற்றிருக்கின்றனர். சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் பரப்பில், பலம் வாய்ந்த சிவில் சமூக அமைப்பு என்று எதுவும் கிடையாது. விடுதலைப் புலிகளின் காலத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் பலமாக இருந்தன. அவை வலுவாக ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.

அதன்மூலம் தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்த, அடிப்படைப் பிரச்சினைகள் சார்ந்த விடயங்களில் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும், நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலகுவான சூழல் காணப்பட்டது.

அரசியல் கட்சிகள் வலுவின்றி இருந்த அந்தக் காலகட்டங்களில், சிவில் சமூக அமைப்புகளே பாரிய அளவிலான பல போராட்டங்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்தன.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் தேசிய அரசியலை வழிநடத்திச் செல்வதற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் போதாமை நிலை காணப்படுகிறது.

தலைமைத்துவ ஆற்றல் குறைபாடுகளும் நிரம்பி இருக்கின்றன. செயற்பாட்டு நிலையில் பின் தங்கிய நிலையே இன்றுவரை காணப்படுகிறது.

இது தமிழ்த் தேசிய அரசியல் வளர்ச்சியை பெரிதும் பாதித்திருப்பதோடு அதன் எதிர்காலம் குறித்த பலமான கேள்வியை உருவாக்கி இருக்கிறது.

சிங்கள தேசியக் கட்சிகள் தமிழ் பிரதேசங்களில் ஊடுருவி நிலை எடுப்பதற்கு தமிழ் தேசியக் கட்சிகளின் இந்தப் பலவீனமே முக்கியமான காரணம்.

இவ்வாறான சூழலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை சரியான வழிக்குக் கொண்டு செல்வதற்கு, அல்லது அவை சரியான பாதையில் செல்வதை உறுதிப்படுத்துவதற்கு தமிழ் சிவில் சமூகம் வலுவானதாக இல்லை என்ற கவலை நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது.

தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தில் முன்னேற்றங்கள் இருக்கிறதோ இல்லையோ, அதனைச் சார்ந்த செயலின் விளைவாக தமிழ் மக்கள் பொதுச்சபை உருவாகி இருக்கிறது. இது எந்தளவுக்குக் காத்திரமானதாக இருக்கும் என்று யாரும் கணிக்க முடியாது.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலகட்டத்தில் உருவாகிய தமிழ் மக்கள் பேரவை ஒரு வலுவான சிவில் அமைப்பாக மாறுகின்ற சூழல் காணப்பட்டது. ஆனால் அரசியல் பின்னணிகள் அதனை கீழறுத்து விட்டன. அது போன்றதொரு நிலை தமிழ் மக்கள் பொதுச்சபைக்கு வந்துவிடக்கூடாது.

அதேவேளை, இந்த சிவில் சமூக கட்டமைப்பின் உருவாக்கம், தமிழ் அரசியல் கட்சிகளுக்குக் கடும் சவாலை, அழுத்தங்களைக் கொடுப்பதாக இருக்கிறது.

பொது வேட்பாளர் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடத்திய கருத்தமர்வில், நாடாளுமன்ற உறுப்பினர், சுமந்திரன், சிவில் சமூகத்தின்மீது வெளிப்படுத்திய காழ்ப்புணர்வும், அரசியல் முடிவை தாங்கள் மட்டுமே எடுக்க முடியும் என்ற எதேச்சாதிகார கருத்தும், அந்த அழுத்தங்களின் வெளிப்பாடு தான்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




# தமிழரின் சர்வதேச புலம்பெயர்தலும், கல்வியும்




## கடந்த இதழ் தொடர்ச்சி...

உலகெங்கும் தமிழினத்துடன் ஒரு பழமையான தொடர்பு உள்ள வரலாறு காணப்படுகின்றதென்கிறார் உலக வரலாறு எழுதிய எல். ஜி. வேல்ஸ்.

தொன்மையான சிந்துவெளிப் பண்பாடு நிலவிய வடமேற்கு இந்தியாவிலிருந்து 2500 வருடங்களுக்கு முன்பே 1400 கிலோ மீற்றரை 1800 ஆண்டுகளில் புலம் பெயர்ந்து தமிழகம் வந்தோர் தமிழர். தேவையேற்படும்போது நாடுகளை நோக்கிப் புலம்பெயரும் துணிவும், வேட்கையும் இயல்பாகவே தமிழரிடம் நிறைந்து கிடக்கிறது.

தமிழகத்தில் அதிகம் வறட்சிமிக்க புவியியல் பிரதேசங்களில் வானம் பார்த்து வாழும் வாழ்க்கை. ஈழத்தின் வடக்கில் வறட்சியும், வளமற்ற மண்ணும் நிறைந்தே கிடக்கின்றன. சுண்ணக்கல் பிரதேசத்தில் பரந்து கிடக்கும் ஆழ்நில நீர்வளம் வேளாண்மையை ஊக்குவித்தது. மண் நம்பிக்கைகளை உலரவிட்டபோது கல்வி கற்றல் அல்லது புலம்பெயர்தல் என்பது வாழ்க்கையின் இலட்சியமாயிற்று. வாழ்வின் பண்பாடாய் விட்டது. கல்விக்காகப் புலம்பெயர்ந்து வாழும் வாழ்க்கை முறையில் இயல்பான நாட்டம் அல்லது வேட்கை ஈழத்தமிழரிடம் அதிகம்.

வணிகம், தொழில் வாய்ப்பு, வானம் பொய்த்து வறுமை நீடித்தல், கொடிய நோய்களின் அச்சுறுத்தல், வறட்சி, வெள்ளம், எரிமலைத்தாக்கம் போன்ற நிலைமைகள் மற்றும் தேவைகளோடு உலகம் முழுவதும் மக்கள் புலம் பெயர்தல் இயல்பானது.

இலங்கைத் தமிழரைப் பொறுத்து, இனக்கலவரங்கள், வாழிடக் கிராமங்களை விட்டு துரத்தப்படுதல், மின்சாரமின்மை, வறுமை, இளைஞர் உயிரபாயம், பாதுகாப்பாற்ற இயல்பு வாழ்க்கை, அரசியல் ரீதியான நில அபகரிப்புப் போன்ற பல காரணிகளினால் 1970-2010 காலப்பகுதி முழுவதும் புலம்பெயர்ந்தனர். ஆபத்து மையங்களிலிருந்து அவசர குடிப்பெயர்வாக ஐரோப்பிய நாடுகளுக்கும், வட அமெரிக்காவுக்கும் தமிழர் பயணித்தனர்.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1830களில் காலனித்துவ முறையில் தமிழகத்திலிருந்து தொழிலாளர் இலங்கைக்கும், தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், ஆபிரிக்க, இலத்தீன், அமெரிக்க நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து அந்தந்த நாடுகளின் குடிமக்களாகினர். இலங்கையில் இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்த பின்பும் கல்வியில் சமவாய்ப்பைப் பெறமுடியாது துன்பப்படுகின்றனர். அதே மக்கள் மேலும் புலம்பெயர்ந்து கல்வி, தொழில் வாய்ப்பு, தொடர்பாகப் புதிய உச்சங்களைத் தொட ஆசைப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழரது சர்வதேச ரீதியான பரம்பல் பற்றிய சில கணிப்புக்கள் உள்ளன. அவை...

| நாடுகள் | குடித்தொகை-2016 |
|---|---|
| இலங்கை | 2,270,024 (2012) |
| இந்தியா | 200,000 (2000) |
| மலேசியா | 1,396,000 (2000) |
| கனடா | 400,000 |
| ஐக்கிய இராச்சியம் | 130,731 |
| தென் ஆபிரிக்கா | 250,000 |
| சிங்கப்பூர் | 188,591 |
| பிரான்ஸ் | 125,000 |
| பிஜி | 80,000 |
| மொரிஷியஸ் | 72,000 (2011) |
| ஜேர்மனி | 60,000 |
| சுவிற்சர்லாந்து | 50,000 |
| அவுஸ்திரேலியா | 50,151 (2011) |
| இத்தாலி | 25,000 |
| நெதர்லாந்து (ஒல்லாந்து) | 20,000 |
| நோர்வே | 10,000 |
| தாய்லாந்து | 5,000 |
| ஐக்கிய அரபுஎமிரேட்ஸ் | 10,000 |
| பஹாமாஸ் | 1,000 |
| டென்மார்க் | 7,000 |
| சீனா | 1,000 |
| கட்டார் | 2,000 |
| சீ செல்ஸ் | 1,000 |
| நியூசிலாந்து | 3,000 |
| வியட்நாம் | 1,000 |
| சுவீடன் | 2,500 |
| கம்போடியா | 1,000 |

மூலம் : Appendix- 2, Srilankan Tamil Population per Nation (Estimates), Victor Rajalingam, History of the Dispossessed SrilankanTamils, 2016, P 286.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் கா. குகபாலன் ஆகியோர் 2017இல் மேற்கொண்ட மதிப்பீடுகளின்படி இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து வாழ்ந்தோர் தொகை பின்வருமாறு இருந்தது.

| நாடுகள் | குடித்தொகை-2017 |
|---|---|
| கனடா | 300,000 |
| ஐக்கிய இராச்சியம் | 60,000 |
| பிரான்ஸ் | 53,000 |
| ஜேர்மனி | 47,000 |
| சுவிற்சர்லாந்து | 40,000 |
| நோர்வே | 14,000 |
| ஐக்கிய அமெரிக்கா | 13,000 |
| அவுஸ்திரேலியா | 16,000 |
| இத்தாலி | 8,000 |
| நெதர்லாந்து | 5,000 |

மூலம்: தீவகம், தொன்மையும், மேன்மையும் பேராசிரியர் கா. குகபாலன், ஏப்ரல் 2017, P6.8

புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழரின் 2016ஆம் ஆண்டுக்குரிய இயற்கை அதிகரிப்பு 45,000 என மதிப்பிட்டு, மொத்தமாக 746,000 இலங்கைத் தமிழர் சர்வதேச நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். எனினும், துல்லியமான தமிழர் குடித்தொகை உலகரீதியில் கணிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மொத்தக் குடித்தொகையுடன் ஆண், பெண், மாணவர் தொழில்வாண்மைமிக்கவர்கள் தொகைகளும் பல்கலைக்கழகங்களின் உதவியுடன் கணிக்கப்படுவதும் அவசியம்.

## இந்தியா

உலகில் அதிக குடித்தொகையான 1.4 பில்லியன் குடித்தொகை கொண்ட நாடு இதுவாகும். 1,269,338 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டது. 27% திராவிடர்களைக் கொண்டது.



இலங்கைத் தமிழர் நெருக்கடிகளின்போது எளிதாக புலம்பெயர விரும்புகின்ற நாடு இந்தியாதான். சட்டபூர்வமாகவும், சட்ட பூர்வமற்ற வகையிலும் சில மணித்தியாலங்களில் புலம்பெயரக்கூடிய வாய்ப்பு அதிகமுள்ளது.

1958 தனிச் சிங்களச் சட்டம், 1983 கலவரங்கள், 1991 தீவக, வலிகாம பிரதேசங்களிலிருந்து கட்டாய வெளியேற்றம், 1971 தரப்படுத்தல் சார்ந்த அரசியல் அமைதியின்மைகள், 1983-2009 காலப் பகுதியிலான சமூக வாழ்க்கையின் மீதான நெருக்கடிகள் போன்ற பல நிகழ்வுகளும் இந்தியாவுக்கான புலம் பெயர்தலை பல நிலைகளில் ஊக்குவித்து வந்துள்ளன.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பு உயர்கல்வி பெறுவதற்காக இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, பம்பாய், டில்லி போன்ற பல பிரதேசங்களில் இயங்கிய கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இலங்கைத் தமிழர் படித்தனர். வேலூர் மருத்துவக்கல்லூரி, கல்கத்தா புள்ளி விபரக் கணிப்பு நிறுவனம், சென்னைப்பல்கலைக்கழகம் போன்றவற்றில் படித்துப் பட்டம் பெறும் ஆர்வம் எம்மவரிடையே அதிகம் காணப்பட்டது. தமிழ்மொழி, இசை, நடனம், இசைக்கருவிகள் சார்ந்த கல்வி பெறுவதற்கு சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று படிப்பதும் பிரபல்யமாயிருந்தது. இத்தகைய கல்விக்காக இந்தியாவுக்கு சென்று படிக்கும் ஆர்வம் அதிகம் இருந்தமைக்கு பின்வரும் காரணங்கள் முக்கியமானவை.

- இலங்கை ரூபாவின் பெறுமதி, அப்போதைய இந்திய ரூபாயின் பெறுமதியை விடவும் அதிகமாயிருந்தது. மாதாந்தச் செலவுக்கு நூறு ரூபாய் போதுமானதென்று பலர் கூறுவதுண்டு.

- ஒத்த பண்பாடு கொண்ட சமூக வாழ்க்கைச் சூழல் இலங்கை மாணவர்களுக்கு இதமாயிருந்தது. கலாசார அதிர்ச்சி எதுவுமிருக்கவில்லை.

- பயணம் செய்வதற்குரிய நேரமும், சிரமமும் மிகவும் குறைவாயிருந்தது. பெண் மாணவர் அதிகம் அங்கு படிப்பதற்கு இது தூண்டுதல் அளித்தது.

- விடுமுறைக் காலங்களில் அடிக்கடி தமது வீடுகளுக்கு இலங்கைக்கு வந்து போவதும் சுலபமாயிருந்தது. செலவும் மிகவும் குறைவாகவே இருந்தது.

- இலங்கையில் நன்கு வளர்ச்சி பெறாத பல துறைகளில் பட்டம் பெறுவதற்குரிய வாய்ப்புக்களை இந்தியக் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் அதிகம் வழங்கின. கணக்கியல், வணிகவியல், புவிசரிதவியல், சமஸ்கிருதம், கர்நாடக இசை, பரத நாட்டியம், ஆங்கில இலக்கியம், இந்து தத்துவவியல் போன்ற பலதுறைகள் அங்கு மாத்திரமே மிகவும் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன.

சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இந்திய பல்கலைக்கழகப் பட்டதாரிகளான ஏராளமான இந்தியர்கள் எமது தமிழ்ப் பிரதேச பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளனர். ஏப்ரஹாம் கோவூர், தோமஸ் ஈப்பன் போன்ற பலர் விஞ்ஞான பாடங்களையும், கணிதத்தையும், ஆங்கிலத்தையும் எமது பாடசாலைகளில் கற்பித்தும் வந்துள்ளனர்.



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, ஹாட்லி கல்லூரி போன்ற பலவற்றில் பெருமைமிகு அதிபர்களாகவும் பணிபுரிந்துள்ளனர். இத்தகைய பண்பாட்டு, கல்வித் தொடர்புகள் வலுவாக இருந்ததால் சுதந்திரத்துக்குப் பின்பும், அரசியல் அமைதியின்மை நிலவிய காலங்களிலும் இலங்கைத் தமிழர் வாழ்வதற்கும், கற்பதற்கும் இந்தியா செல்லும்போக்கு மிகவும் இயல்பானதாகவே உணரப்பட்டது.

(தொடரும்)



## நாமும் நமது இல்லமும் 656

# கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதக் குறைப்பு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 2022ஆம் ஆண்டிலிருந்து 0.25%இல் இருந்து 5%வரை ஜுன் 2024ஆம் ஆண்டுவரை அதிகரிக்கப்பட்டு வந்தது.

Toronto Regional Real Estate Board (TRREB) April, 2024இற்கும் May, 2024இற்குமான தொடர்புகள்

| | ஏப்ரல் 2024 | மே 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| விற்கப்பட்ட ஆதனங்கள் | 7114 | 7013 | (–1.4%) இறக்கம் 1.4% |
| சந்தையில் இருந்த ஆதனங்கள் | 18,088 | 21,760 | + 20% ஏற்றம் |
| சராசரி ஆதன விலை | $1,156,167 | $1,165,691 | +0.82% (ஏற்றம்) |

இதனால், கனடிய மக்களின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. 2022இன் முதல் காலாண்டுப் பகுதிவரை ஆதன விலையும், வியாபாரமும் அதிகரித்து வந்ததனைக் காணக் கூடியதாகவும் இருந்தது. இதனால் பணவீக்கம் (Inflation) அதிகரித்தது.

இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காகக் கனடிய மத்திய வங்கி தொடர்ச்சியாக 17 மாதங்களில் 10 தடவை தனது வட்டி வீதத்தை அதிகரித்து வந்தது.

மார்ச் 2020இலிருந்து 2022 மார்ச் வரை மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.25 ஆகவே காணப்பட்டது. மார்ச் 2022 இலிருந்து வட்டிவீதம் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டே வந்தது. ஜுலை 2023இல் 5%ஆக அதிகரிக்கப்பட்டது. ஏறக்குறைய 4 வருடங்களில் முதல் தடவையாக ஜுன் 05, 2024 அன்று வட்டி வீதம் 0.25% இனால் இறக்கப்பட்டு 4.75% ஆகக் காணப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கனடிய முக்கிய வங்கிகள் தமது முதன்மை வட்டி வீதத்தை 0.25%இனால் குறைத்து 6.95%ஆகக் காணப்படுகின்றது.

கனடிய மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் ரிவ் மக்கெலம் (Tiff Maclem) பணவீக்கம் குறையும்போது மேலதிக வட்டி வீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

வட்டி வீதத்தில் 0.25% இறக்கம் என்பது சிறியளவாக இருந்தாலும் மக்களுக்கு இது ஓர் உற்சாகத்தைக் கொடுக்கலாம் என எதிர்பார்க்கலாம்.

G7 (Group of 7 Countries) நாடுகளில் முதலாவதாக வட்டி வீதத்தை இறக்கிய நாடாகக் கனடா உள்ளது. (ஜுன் 5, 2024 வட்டி இறக்கம் ஏற்பட்டது)

இதனைத் தொடர்ந்து ஜுன் 06, 2024 அன்று ஐரோப்பிய ஒன்றிய மத்திய வங்கியும் தனது வட்டி வீதத்தை 0.25%இனால் குறைத்து 3.75% ஆக்கியுள்ளது. 2022இற்கு முன்னர் நீண்டகால அடமானக்கடனில் வைத்திருந்தோரின் அடமானம், புதுப்பிப்பதற்குரிய காலம் மிக விரைவில் ஏற்படும். இதனால், வட்டிவீத இறக்கம் இவர்களுக்கு உதவியாக இருக்கலாம்.

| | | |
|---|---|---|
| March 27, 2020 | 0.25% | -0.50% |
| March 2, 2022 | 0.50% | 0.25% |
| April 13, 2022 | 1.00% | 0.50% |
| June 1, 2022 | 1.50% | 0.50% |
| July 13, 2022 | 2.50% | 1.00% |
| September 7, 2022 | 3.25% | 0.75% |
| October 26, 2022 | 3.75% | 0.50% |
| December 7, 2022 | 4.25% | 0.50% |
| January 25, 2023 | 4.50% | 0.25% |
| June 7, 2023 | 4.75% | 0.25% |
| July 12, 2023 | 5.00% | 0.25% |
| June 5, 2024 | 4.75% | -0.25% |




இந்த வருட முடிவிற்குள் மொத்தமாக 1% குறைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

கனடிய மத்திய வங்கியின் அடுத்த சந்திப்பு ஜுலை 24, 2024 ஆகும். ஏற்கனவே மாறுகின்ற வட்டி வீதத்தில் அடமானக் கடனை வைத்திருப்போரிற்கு இந்த வட்டி வீத இறக்கம் சிறிதளவு நிவாரணத்தைக் கொடுக்கும்.

ஜுன் 2022இல் அதிகூடிய பணவீக்கம் 8.1%ஆகக் காணப்பட்டது. ஏப்ரல் 01, 2024இல் 2.7% ஆகக் காணப்படுகின்றது. கனடிய மத்திய வங்கியின் குறிக்கோள் 2% ஆகும். இதனை நோக்கியே மத்திய வங்கியின் ஆளுநர் செயல்படுவார் என்பதும் யாவரும் அறிந்ததே.

எனினும் கனடிய மக்களின் இன்றைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு வட்டி இறக்கம் என்பது தவிர்க்க முடியாததே.

வன்கூவரில் சிறிய நிர்மாண நிறுவனங்கள் திவாலாகின்றன.

சிறிய நிர்மாண நிறுவனங்கள் மாதாந்த அடமானக்கடன் கொடுப்பனவு செலுத்துவதில் நெருக்கடி நிலையை எதிர்நோக்குகின்றன.

பெரிய நிறுவனங்களுக்கு, ஏற்கனவே செய்த முதலீடுகளிலிருந்து வருமானம் வருவதால் இவர்களினது நிலைமை சற்று வித்தியாசம். ஆனால், சிறிய நிறுவனங்களின் வருமானம் எல்லைக்குட்பட்டது. மாதாந்தக் கொடுப்பனவு பிந்தும்போது, அடமானக்கடன் கொடுத்த நிறுவனங்கள் நிலத்தை / கட்டிடத்தை சந்தைக்கு விற்பனைக்காக விடுகின்றன. இதனால் பல சிறிய நிறுவனங்கள் இவ்வாறான நிலைக்கு உட்படுகின்றன.

இவ்வாறான நிலைமைகள் முன்பும் ஏற்பட்டன. ஆனால் இம்முறை, குறுகிய கால, அதிக வட்டி அதிகரிப்பு பெரும் மாற்றத்தை கட்டிட நிர்மாண தொழில் முறையில் ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது வன்கூவரில் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை ரொறொன்ரோவிலும் எதிர் காலத்தில் ஏற்படலாம். அதிக பணத்தை வைத்திருக்கும் பெரிய நிறுவனங்களுக்கு இவ்வாறான நிலைமை சாதகமாகலாம். இப்பொழுது குறைந்த விலைக்கு வாங்குவோர் எதிர்காலத்தில் அதிக நன்மை பெறுவர்.



# மோடிக்கு சிம்ம சொப்பனமாக மாறிய துருவ் ரத்தே – இவர் செய்தது என்ன?

**கண்ணன்**

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவில் பலருக்கும் பெரும் ஆச்சரியமளித்தது, வட இந்தியா தேர்தல் முடிவுகள். குறிப்பாக இந்தியாவின் பெரிய மாநிலமும் 80 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதுமான உத்தரப்பிரதேசம் மோடியையும் பாஜகவையும் கைவிட்டதுதான். வட இந்தியாவில் பாஜகவின் பலமான வாக்கு வங்கியான நடுத்தர மற்றும் உயர் நடுத்தர மக்களின் மனங்களில் ஏற்பட்ட இந்த மாற்றத்துக்கு அனைவரும் சுட்டிக் காட்டும் ஓர் ஆள், துருவ் ரத்தே.

“இவன் ஒரே ஆள்… ஆனா இவன் பண்ணின வேலை ரொம்பப் பெரிசு…” என்று, இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கிய நிமிடங்களில் இருந்து, சமூக வலைதளங்களில் வைரலானார், துருவ் ரத்தே. இவரைப்பற்றி சர்வதேச ஊடகங்கள் கட்டுரைகள் வெளியிட்டன. இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் களத்திற்கே வராமல், தேர்தல் முடிவுகளைத் தீர்மானித்ததில், முக்கியமானவராக அறியப்படும் இந்த துருவ் ரத்தே யார்? ஒற்றை ஆளாக அவர் செய்தது என்ன?

## துருவ் ரத்தே செய்தது என்ன?

இன்று உலகளவில் அறிமுகமான மிகச் சில யூடியூபர், விளாக்கர், சமூக ஊடக ஆர்வலர்களில் துருவ் ரத்தேவும் ஒருவர். குறிப்பாக சமூக அரசியல், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த யூடியூப் காணொளிகளுக்காக இந்தியா முழுவதும் மிகப் பிரபலமாக அறியப்படுகிறார், துருவ்



ரத்தே. ஜுன் 12, 2024அன்றைய நிலவரப்படி, துருவ் ரத்தே சேனலை 2 கோடியே 22 லட்சம் பேர் பின்தொடர்கின்றனர். இது வரை 288 கோடியே 88 லட்சம் பேர் அவரது காணொளிகளைப் பார்த்திருக் கின்றனர். இன்ஸ்டாக்ராமில் 1 கோடியே 14 லட்சம் பேரும், வாட்ஸ் அப் சேனலில் 41 லட்சம் பேரும், ஃபேஸ்புக்கில் 31 லட்சம் பேரும், ட்விட்டரில் 25 லட்சம் பேரும் துருவ் ரத்தேவை பின் தொடர்கின்றனர்.

ஏப்ரல் 2024இல் விஜய் ஆன்ரனி மற்றும் மிருணாளினி இரவி ஆகியோரின் நடிப்பில் வெளியான படம் இது.

இப்படத்தில் அறிவு (விஜய்) என்ற சமையல் வல்லுநர் (Chef) மலேசியாவில் வாழ்கிறார். இதுவரை ஒருவரையும் காதலிக்காத அறிவு, 35 வயதில் மீண்டும் தமிழ்நாட்டிலுள்ள தனது கிராமத்திற்குத் திரும்பி வருகிறார். ஒரு நிகழ்ச்சியில் லீலாவை (மிருணாளினி) அவர் சந்தித்து, கண்டவுடன் காதல் கொள்கிறார். தனது பெற்றோரின் ஊக்குவிப்புடன் அவளை முறையாகத் திருமணம் செய்கிறார்.

இருவரும் திருமணத்தை முடித்து சென்னைக்குச் செல்கின்றனர். அங்கு அமைதியாகவும், ஒழுங்காகவும் இருக்கும் அறிவிற்கு மாறாக, லீலா இருக்கிறார். கொடூரமான தனது தந்தையிடமிருந்து தப்பிக்கவே லீலா, தன்னைப்பற்றி ஒன்றும் அறியாத அறிவை திருமணம் செய்தார். ஆனால், லீலா அமைதியானவர் அல்ல. ஒரு குறிக்கோளுடன் சென்னைக்கு வந்துள்ளார். வலுவான குணமுடைய லீலா, நகர வாழ்விற்கு ஏற்ப தனது நண்பர்களுடன் சேர்ந்து தான் விரும்பிய துறையில் வேலை செய்ய முயற்சிக்கிறார்.



மிகவும் அமைதியான அறிவுடன் குழப்பமும், குறிக்கோளுமுடைய லீலா வாழ்வாரா? தனது குறிக்கோளை அடைவாரா? இல்லாவிட்டால் இருவரும் விவாகரத்துச் செய்வார்களா? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இவ்வாறு திருமணத்திற்கு முன் பரீட்சயம் இல்லாதவர்கள் திருமணத்திற்குப் பின் எவ்வாறு வாழ்கின்றனர்? எனப் பலவிதமான படங்கள் வந்துள்ளன. இப்படத்தில் ஆண் கதாபாத்திரத்தை அமைதியாகக் காட்டியது ஓரளவிற்கு வித்தியாசமாக இருந்தாலும், அவர் மனைவியை



அடக்கவோ, மாற்றவோ முயலாதது மிக முக்கியமான, பெரிய வித்தியாசமாகும்.

உண்மைத்தனமான படங்கள் கடினமாகவும், நகைச்சுவைப்படங்கள் கருத்தற்றவையாகவும் இருக்க வாய்ப்பு அதிகம்.

இது நகைச்சுவைப்படம் என்பதால் கருத்தில் தெளிவு குறைவாகவும், உண்மைத்தன்மை குறைவாகவும் இருக்கிறது. அறிவினதும் குறிப்பாக லீலாவின் செயல்களும் இதனால் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தாலும், அறிவு பெண்களை மதிப்பவர் என்றும் லீலா சிக்கலான சூழ்நிலையிலிருந்தும் தனது இலக்கை நோக்கி உழைப்பவர் என்ற இரு கருத்துகளும் எளிதில் விளங்குகின்றன. லீலாவின் மிகைப்படுத்தப்பட்ட செயல்கள் தேவையற்றதாக இருந்தாலும், இவை இல்லாமல் படம் நகைச்சுவை இழந்து கடினமாக இருந்து அதிக ஆய்விற்கு உள்ளாகியிருக்கும். எனவே படத்திற்கு இன்னும் தெளிவும் கருத்தில் உறுதியும் கொடுத்திருந்தால், பெண்கள் படும் கஷ்டங்கள், பழகாமல் பேசிச் செய்த திருமணத்தில் வரும் சிக்கல்கள் போன்ற கருத்துகள் முக்கியமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், இப் படம் அப்படிப்பட்ட கருத்து முக்கியத்துவம் கொண்ட படம் அல்ல. எளிதாக பார்க்கக் கூடியது.

வழமைப்போல் அமைதியாக நடிக்கும் விஜய் ஆன்ரனி மற்றும் சற்று வில்லத்தனமாக நடித்த மிருணாளினியும் நன்றாக நடித்துள்ளனர். சில கருத்துகளைக் காட்டும் நகைச்சுவைப் படத்தைப் பார்க்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.

# கனடா, குரும்பசிட்டி நலன்புரி சபையினரின் நூல் வெளியீடு



குரு அரவிந்தன்

சென்ற ஜுன் மாதம் 02ஆம் திகதி 2024, ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா, குரும்பசிட்டி நலன்புரிச் சபையினரால் அமரர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் ‘தாய்வீடு’ பத்திரிகையில் எழுதிய ‘இலக்கிய உறவுகள்’ என்ற கட்டுரைகள் தொகுக்கப்பட்டு ஓர் ஆவண நூலாக வெளியிட்டு வைக்கப்பெற்றது. இந்த நிகழ்விற்கு கனடா-குரும்பசிட்டி நலன்புரிச் சபையின் தலைவர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் தலைமை தாங்கினார்.



முதலில் அமரர் கந்தவனம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி இடம் பெற்றது. குடும்பத்தினர், மற்றும் வருகை தந்தோரின் மலரஞ்சலியைத் தொடர்ந்து இறை வணக்கம் இடம் பெற்றது. கனடா தேசியப் பண், தமிழ் வாழ்த்து, இறைவணக்கம் ஆகியன சாச்சவி திலீபன் அவர்களால் பாடப்பெற்றன. அதன்பின் அமைதி வணக்கம் இடம் பெற்றது.

செயலாளர் கணேஸ்வரி குகனேசன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து ஐயாத்துரை ஜெகதீஸ்வரனின் தலைமையுரை இடம்பெற்றது. அடுத்து மறைந்த கவிஞருக்கான அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. திரு. வி.எஸ். துரைராஜா, திரு. க. சிவதாசன், எழுத்தாளர் இரா. சம்பந்தன், உதயன் ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், வீணைமைந்தன் சண்முகராஜா, பொன்னையா விவேகானந்தன், தமிழ்ப் பணி வா.மு.சே.திருவள்ளுவர் ஆகியோரது அஞ்சலி உரைகள் இடம் பெற்றன.

நினைவேந்தல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து கவிஞர் கந்தவனம் அவர்களின் ‘இலக்கிய உறவுகள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. எழுத்தாளர் குரு



அரவிந்தன் நயவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் “முதலில் கனடா தேசியப்பண், இறைவணக்கம் ஆகியவற்றை மிகச் சிறப்பான குரல் வளத்துடன் இனிமையாகப் பாடிய, இங்கே பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையைச் சேர்ந்த செல்வி. சாச்சவி திலீபன் அவர்களைப் பாராட்டுகின்றேன். இன்று சாச்சவி போன்ற இளைய தலைமுறையினர் துணிந்து கனடிய மேடையில் நின்று தமிழ் மொழியில் இசைப்பதற்கு, இந்த நூலில் கவிஞர் குறிப்பிட்ட கனடாவில் உள்ள ஒவ்வொருவரும் ஏதோ விதத்தில் காரணமாக இருந்திருக்கின்றனர். இந்த இலக்கிய உறவுகள் என்ற நூலில் சுமார் எண்பது இலக்கிய உறவுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். இவர்களில் பலரோடு நானும் பழகியிருக் கின்றேன், பலர் எனது ஊரைச் சேர்ந்தோர், நடேஸ்வரா மற்றும் மகாஜனா கல்லூரிகளுடன் தொடர்புடையோர், சிலர் அதிபர் பொ. கனகசபாபதி மற்றும் கவிஞர் கந்தவனம் மூலம் கனடா எழுத்தாளர் இணையத்தில் எனக்கு அறிமுகமானோர். கனடாவில் கடந்த 35 வருடங்களாகத் தமிழ் மற்றும் சைவ சமயத்தை வளர்ப்பதில் தம்மை அர்பணித்



தோர் பலரைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது.” என்று தனதுரையில் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய வாணி சிவராஜன் “தனக்குத் தெரிந்த சிலரின் பெயர்கள் நூலில் இடம்பெற்றிருப்பதையும், காங்கேசன்துறை குருநாதபிள்ளையின் மூத்த மகள், குரு அரவிந்தனின் சகோதரி கௌரியின் கணவர் அதிபர் பொ. கனகசபாபதி, அவரின் ஒன்றுவிட்ட சகோதரி



வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) மற்றும் எழுத்தாளர் குரு அரவிந்தனைப் பற்றியும் குறிப்பிட்டிருப்பதால் ஒரே குடும்பத்தில் மூவரைப்பற்றி எழுதியிருப்பது பெருமைப்பட வைக்கின்றது.” என்று குறிப்பிட்டார்.

அடுத்து பேராசிரியர் அ. சந்திரகாந்தனின் உரையைத் தொடர்ந்து தாய்வீடு ஆசிரியர் பி.ஜே. டிலிப்குமார் வெளியீட்டுரை நிகழ்த்தினார். சிறப்புப் பிரதிகளை எழுத்தாளர் எஸ். ஜெகதீசன், சி. இராஜதுரை, கௌரி கருணாரத்தன, யசோதா அரவிந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். கவிஞரின் மகள் வாணி கந்தவனம் நன்றியுரை வழங்கினார்.

அப்பா என்பது
ஒரு அதிசயமான புத்தகம்.
அது கிடைக்கும் வயதில்
நம்மால் அதை
புரிந்துகொள்ள முடிவதில்லை.
புரிந்துகொள்ள
நினைக்கும்போது
அது கிடைப்பதில்லை.

# தந்தையின் தோழமை உறவு



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

தந்தை - பிள்ளை தோழமை உறவு உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்தால் அது அழியாத சொத்து. காலம் செல்லச் செல்லத்தான் அதன் மகத்துவம் தெரியும். பொதுவாக தற்போது தந்தை பிள்ளை உறவு குறுகிக்கொண்டு போகிறது. பாசத்தை, தோழமையை தக்க வைப்பது கடினமாக உள்ளது. தந்தை விலைமதிக்க முடியாத செல்வம். தாயின் அழுகைக்கு ஆறுதல் சொல்லும் பிள்ளைகள் அதிகம் வந்துவிட்டனர். ஆனால் தந்தையின் அழுகையை தாங்கிக் கொள்ளும் பிள்ளைகள் இன்னும் பிறக்கவில்லை என்பதே உண்மை. தந்தை பிள்ளை உறவின் விரிசல் என்பது காலம் முடிவு செய்வ தில்லை. அவரவர்களின் வார்த்தைகளும், நடத்தைகளும் தான் முடிவு செய்கிறது. தந்தை பிள்ளைத் தோழமை உறவு என்பது வாழும் இடத்தில் அல்ல. வாழும் விதத்தில்தான் தங்கியுள்ளது. அன்புக்கும், பாசத்துக்கும் ஏங்கும் பிள்ளைகள்தான் ஏதோ ஒரு பொருளுக்கு அடிமையாகி தம் வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். தந்தை பிள்ளை உறவில் தோழமையை வரவழைத்துக்கொண்டால் வாழ்க்கை சிறக்கும். தோழமை கொள்ள முடியாமல் தவிக்கும் தந்தையர்களே அதிகம். தோழமையுடன் நடந்துகொள்ள தந்தையர் விரும்பினாலும் பிள்ளைக்கு நேரமில்லை. தந்தையர் தோழமை கொள்ளும் விதத்தில் சில பிள்ளைகள் இல்லை. சிலருக்கு இன்றைய நிலை இப்படி இருக்கு. பொதுவாக தந்தை - பிள்ளை உறவு கேள்விக் குறியாகிவிட்டமை மனவேதனைக்குரியதாகும்.

பிள்ளைகள் மீதான எதிர்பார்ப்புக்களைக் குறைத்தாலே தோழமை நிலைக்கும். தந்தை அதிக எதிர்பார்ப்பை சுமந்து அவை ஏமாற்றத்துக்கு உட்படுமாயின் தோழமை பலவீனமடையும். தந்தையின் அன்பைப் பிள்ளை புரிந்துகொள்ளாவிட்டால் அழுகைகூட நடிப்புத்தான். தோழமை வலுக்க அளவுடன் பழக வேண்டும், பக்குவமாக நடந்துகொள்ள வேண்டும். பிள்ளை தவறு செய்தால் பக்குவமாக எடுத்துச் சொல்லி திருத்த வேண்டும். பிள்ளைகளை வீடு கண்டிக்கவில்லை என்றால் வீதி கண்டிக்கவேண்டிவரும். பக்குவம் என்பது பெரிய, பெரிய விஷயங்களை பேசுவதல்ல, சிறிய விஷயங்களைக்கூட புரிந்து நடந்து கொள்வதாகும். உணர்ச்சி வசப்பட்டு நடந்துகொள்ளக்கூடாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் வேறு பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பேசக்கூடாது. கண்ணியமாக பழகும் தோழமைக்கு ஆயுள் அதிகம். ஆண் பிள்ளையை செலவாளியாகவும், பெண் பிள்ளையை செல்லமாகவும் வளர அனுமதிக்கக்கூடாது. வீட்டுக்கு அடங்காத பிள்ளையை ஊர் அடக்கும்.

பிள்ளைகளை தோழமையுடன் சரியான பாதையில் அழைத்துச் செல்லவேண்டும். பாதை தவறின் தோழமை சறுக்கிப் போகும்.

நட அதிர்வின்றி, பேசு பணிவாக, சுவாசி ஆழமாக, தூங்கு அமைதியாக, சிந்தி சுயமாக இவற்றைப் போதித்து வளர்க்க வேண்டும். நல்லவனாக மட்டுமல்ல வல்லவனாகவும் வாழ வழிகாட்டவேண்டும். வாழ்க்கைப் பாடங்களை தந்தையிடமே கற்றுக்கொள்ளவேண்டும். "பிள்ளைகளின் நடவடிக்கைகள் தொடர்பாக மனதோடு அரட்டை அடிக்கக்கூடாது" இது ஓஷோவின் கருத்தும்கூட. தந்தை தன் தவறான ஒழுக்கங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இல்லையேல்






தந்தையின் தவறான பாதையில் பிள்ளை தோழமைகொள்ள நேரிடும். பிள்ளை தொடர்பான தகவல்களை வலுவாக பகுப்பாய்வு செய்து அதன் அடிப்படையில் முடிவுகள் எடுக்கவேண்டும். அவசரமான வாழ்க்கையில் கை நழுவிப் போனபின் கவலைப்படுவதில் என்ன பயன்? தந்தையின் கவனிக்கத் தவறும் தருணங்கள் தோழமையில் பாதிப்பை ஏற்படுத்தும். தேவையான இடத்துப் பாராட்டும், நன்றியும், ஊக்குவிப்பும், உற்சாகமும் வழங்கப்படவேண்டும். மனம் நொந்து போகும் நிலைகளில் அரவணைத்துச் செல்லவேண்டும். பிள்ளையின் பரிணாம வளர்ச்சி பரிதாப வளர்ச்சியாக அமைய தந்தை காரணமாக இருக்கக்கூடாது. எல்லாவற்றுக்கும் ஒரு வரையறை உண்டு. ஓர் எல்லையும் உண்டு. அதைமீறாத வகையில் இருவரும் தோழமைகொள்ள வேண்டும். அதை மீறின் கண்ணீரும், கவலையும்தான் மிஞ்சும்.

"பிள்ளைகளின் சிறிய தவறுகளைக்கூட கண்டும் காணாமல் விட்டுவிடக்கூடாது. சிறிய தவறுகளை உடனும் திருத்துக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளை தவிர்க்க முடியாது போய்விடும்" இது கன்பூசியஸ் கூற்றும்கூட. தோழமை உறவுடன் திருத்திக்கொள்ள வேண்டும். தோழமை உறவில் அடித்தாலும்கூட வலிக்காது. பிள்ளையை தேவையில்லாமல் தப்பாகப் புரிந்துகொண்டால் பிள்ளைமீது வைத்திருந்த கருத்து மாறுபடும். ஐம்புலன்கள்மூலம் நாம் என்னென்ன விடயங்களை உள்ளே எடுக்கிறோமோ அதுதான் கருத்து. கருத்தை எப்படிப் போட்டு வைத்திருக்கிறோமோ அதுதான் செயல் வடிவம். குற்றவாளிகள்போல் பிள்ளையிடம் அணுகாதீர்கள். மனிதர்கள் கெட்டவர்கள் என்பதற்காக என் பிள்ளையும் அப்படித்தான் என நினைத்துக் கொண்டால் தோழமை உறவுடன் பிள்ளையுடன் பழகமுடியாது. மிகப் பெரிய சொத்து பிள்ளை என்கிறார் வள்ளுவர். எனவே அவர்களை சிதைக்காது வளர்க்க வேண்டும்.

பிள்ளையிடம் கேள்வி கேட்கும்போது யதார்த்தமாக நேரடியாகக் கேட்க வேண்டும். சந்தேகம் இருக்கக்கூடாது. சந்தேகப்பட்டால் பிள்ளை பொய் சொல்லப்பார்க்கும். தந்தை யதார்த்தமாக இருந்தால் பிள்ளையும் அவ்வாறே. பிள்ளை கேள்விக்கான விடையை துணிந்து சொல்ல இடமளிக்கவேண்டும். தனக்கு வேண்டியதை பிள்ளை தயக்கமின்றி தந்தையிடம் கேட்கக்கூடியதாக உறவு இருக்கவேண்டும். சரியான தோழமை இருப்பின் சரியான புரிதல் இருக்கும். சரியான புரிதல் இருப்பின் விலகும் நிலை இருக்காது. தாயின் பாசக் கடனையும், தந்தையிடம் தோழமையுடன் வளர்த்த கடனையும் அடைக்க முடியாது. கடைசிவரை பிள்ளைகள் கடனாளிதான். கோபத்தில் ஏழையாகவும், அன்பில் பணக்காரனாகவும் இருந்தால் தந்தையின் தோழமைக்கு பஞ்சம் இருக்காது. தந்தையின் பக்குவத்துக்கு எடுத்துக் காட்டு, எது நடந்தாலும் நிதானமாக இருப்பது. தோழமை உறவுக்கு சொற்கவனமும் அவசியம். நேசத்துக்கு அது இடையூறாக இருக்கக்கூடாது. நேசமுள்ள நெஞ்சம் நேசிக்க மறப்பதில்லை.

நிதானம் தவறின் தோழமை மட்டுமல்ல நிம்மதியும் தவறும். சமையல் சரியாக அமையாவிட்டால் ஒருநாள் இழப்பு, அறுவடை சிறக்காவிட்டால் ஓர் ஆண்டு இழப்பு, தந்தை பிள்ளை தோழமையில் இழப்பு ஏற்பட்டால் வாழ்நாளே இழப்பு. பிள்ளைகளின் பாதுகாப்பு, உயிர் வாழ்க்கை, சமூகவயப்படுத்தல், ஆதரவு, கல்வி, ஆளுமை விருத்தி என்பவற்றில் தந்தையின் பணி முக்கியம். குடும்பத்தைப் பொறுத்தவரை உள்ளகக் கருமங்கள், வெளியகக் கருமங்கள் இவற்றை ஆற்றுவது தந்தையின் அறிவு, திறன், மனப் பாங்கு என்பன பின்னிப்பிணைந்து இருக்கும். "எமது வாழ்வின் நிரந்தர அர்த்தம் எமது அன்றாடவேலைகளில் எமக்குக் கிடைக்கும் வெற்றிகளில் மட்டுமல்ல அது எமது குழந்தைகளில் நாம் உருவாக்கும் நற்பண்புகளில் தங்கியுள்ளது" என்கிறார் குஷ்னர் என்ற சமூகவியலாளர். எனவே தந்தை பிள்ளை தோழமை உறவு நன்றாக அமைந்தால் பிள்ளைகளை வென்றெடுப்பது இலகு.

நம் எல்லையில் நாம் நின்றுவிட்டால் கௌரவம். மற்றவரால் நிறுத்தப்பட்டால் அது அவமானம் என்பதை உணர்ந்து வளர்ந்தால் தந்தைக்குப் பிரச்சினை இல்லை. தம்மைப்பற்றிய சுய உணர்வை தந்தையும், பிள்ளையும் மதிப்பீடு செய்வார்களாயின் பலம், பலவீனத்தை தெரிந்து வாழக்கூடியதாக இருக்கும். இது தோழமை வளர உதவும். பிள்ளை வளர்ப்பில் கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் ஆபத்தானது. பிள்ளைகளின் பேச்சைக் கேட்கும் தலைமுறைதான் இக்காலத்தில் இருக்கும் தலைமுறை. பிள்ளையை பெரியாளாக்குவதுதான் தந்தையின் விருப்பு. யார் பெரியாள்? என்பதுதான் கேள்வி. ஒருவரால் எப்பொழுது நாலுபேருக்கு நன்மை நடக்குதோ அவர்தான் பெரியாள். அந்த நிலையை தந்தை ஆக்கிக்கொள்ள வேண்டும். பிள்ளையிடம் குற்றம் காண்பது அதிகமானால் அன்பின் ஆயுட்காலம் குறைந்துவிடுகிறது. தந்தை பிள்ளை உறவுகள் கண்ணாடிமாதிரி. தந்தை எப்படிப் பழகுகிறாரோ அப்படித்தான் அதன் பிம்பங்களும்.

தந்தை பிள்ளை உறவு உன்னதமானது. அதுவே வாழ்க்கை எனும் வாகனத்தை மகிழ்ச்சியோடு செலுத்திச்செல்ல உதவும் சக்கரங்கள். இந்த தோழமை உறவில் கீறல்கள் விழும்போது வாழ்வில் விரிசல்கள் வலுக்கும். இதனை எப்படியாவது சீர்செய்யவேண்டும். தந்தை பிள்ளை உறவு தோழமை உறவாக இருப்பதுதான் நல்லது. ஆனால் இன்று இவ் உறவு சிக்கனமாகிவிட்டது.

## தந்தை என்கின்ற போதினிலே...

தந்தை என்கின்ற போதினிலே எம்
சிந்தை சிறக்குது ஏற்றத்திலே

விந்தையாய் அந்த வாழ்வினிலும்
எந்தையாய் எமை ஏற்றபோதும்
கந்தையாய் காலம் கழிந்தபோதும்
மந்தையாய் மனங்கலைந்த போதும்
பேசாது குழப்படிகள் படைத்தபோதும்
கூசாது பொய்யுரைகள் குவித்தபோதும்
தூசாய் பணத்தினைத் தொலைத்தபோதும்
வீசாத சினம் காத்து விசித்திரமாய்
நற்றவனாக்க நாலு கதைகள் கூறி
கற்றவனாக்க கல்விக் குதவி செய்து
சுற்றமும் என் பெயர் சொல்ல எமைப்
பெற்றதே இன்பம் பேரின்பம் என்று

பெற்ற தாயெமையள்ளி அணைத்திடச் செய்து
கற்றவர் கண்ணிலெமைத் தாங்க செய்து



தந்தையர் தின வாழ்த்துகள்

சுற்றமும் வாழ்த்தி யெமைச் சுற்றிடச் செய்து
வற்றாவெயர்வையிலெயெமைக் குளிரச் செய்து

கூடப் பிறந்து குடும்பமாய் கூடிய உறவுகளின்
மாடவாழ்வுக்கே வழிகாட்டியாய் எம் வாழ்வின்
பாடப் புத்தகமாய் படிந்திருந்து எம்நெஞ்சில்
வாழ்ந்து வழிகாட்டும் தந்தைக்கு வாழ்த்துகள்

– செல்லத்துரை மனுவேந்தன்

# கம்போடிய அரசின் வாழ்நாள் சாதனை விருது பெற்ற கலாநிதி பாரதி இளமுருகனார்

அங்கோர் தமிழ்ச் சங்கமும் கம்போடிய அரசின் பண்பாடு மற்றும் நுண்கலை அமைச்சும் இணைந்து ஒழுங்குசெய்த உலகத் தமிழ்க் கவிஞர்கள் மகாநாடு கம்போடியாவிலே கோலாகலமாகக் கொண்டாடப்பெற்றது. இந்த மகாநாட்டிலே தான் தமிழ்க் கவிஞர்களுக்கான கவிதைப் போட்டியும் நடந்தேறியது. அந்த விழா விலேதான் பாரதி அவர்களுக்குக் கம்போடிய அரசினால் இப்பெறுமதிமிக்க விருது வழங்கப்பெற்றது. அயல் நாடொன்று இவரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டிக் கௌரவம் அளிக்கின்றது என்றால் இவர் ஆற்றிய சேவைகளின் உயர்வு பாராட்டுவதற்கு உரியதல்லவா?

ஈழவள நாட்டிலே புலவர் பரம்பரையை இலங்கச் செய்து தமிழிலே 15,000திற்கும் அதிகமான பாடல்களை இயற்றித் தமிழுக்கு அணி சேர்த்தவர் நவாலி ஊரிலே திருத்தக வாழ்ந்த சோமசுந்தரப் புலவர் ஆவார். வன்னியசேகர முதலியார் பரம்பரையிலே அரச வழித்தோன்றலாகப் பிறந்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைபெற்று விளங்கி, 'தங்கத் தாத்தா' என்று அறிஞர்களால் அன்புடன் அழைக்கப்பெற்று வந்த புலவரின் மூத்த புதல்வனே கவிசிந்தாமணி புலவர்மணி இளமுருகனார் அவர்கள். இளமுருகனார் அவர்களின் மூத்த புதல்வனாகிய கலாநிதி சோமசுந்தர பாரதி சிறு வயதிலிருந்தே



தமிழிலும் சைவத்திலும் மிகுந்த பற்றுடையவராகவும் சமூக சேவை செய்வதில் விருப்பங்கொண்டவராகவும் விளங்கினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் பூரண ஆசீர்வாதம்

எட்டு வயது நிரம்பிய பாரதியை அவரின் தந்தை (கொழும்புத்துறை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலே தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய கால கட்டத்திலே) ஒருநாள் தவத்திரு யோகர் சுவாமிகளிடம் அழைத்துச் சென்றிருக்கின்றார். பாரதியைத் தனது மடியிலே தூக்கி வைத்து ஒரு வாழைப்பழத்தை உரித்து இவருக்குச் சுவாமிகள் முற்றாக ஊட்டினார். இவருடைய தந்தை சுவாமியிடம் "இவன் என்ன செய்யப்போகிறானோ தெரியவில்லை சுவாமீ. குழப்படி அதிகம்" என்று சொல்ல, சுவாமி உடனே, "அவன் பல்லைப் பிடுங்குவான் போ" என்று அருள்வாக்காகச் சொல்லிச் சிரித்தார். அப்பொழுது அவர் சும்மா பகிடிக்குச் சொல்கிறார் என்று நினைத்து நாளடைவில் அவர் சொன்னதை பாரதியின் குடும்பத்தார் மறந்தே விட்டனர். சிவாஞானச் சித்தரின் வாக்குப் பொய்யாகுமோ?.

பின்னர் இஸ்கந்தவரோதயாவின் அதிபராக விளங்கிய இவரின் தாய்மாமனாகிய ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் விருப்பப்படி அந்தக் கல்லூரியிலே தனது கல்வியைத் தொடர்ந்தார். 12ஆம் வகுப்புச் சோதனையிலே மிகவும் திறமையாகச் செய்து நேரடியாக மருத்துவம் (MBBS) செய்வதற்குத் தெரிவானார். ஆனால் அந்தக் காலத்திலே இறுதியாக ஒரு நேர்முக உரையாடல் வழக்கத்தில் இருந்தது. அந்த உரையாடலிலே இவருக்கு பல்மருத்துவம்தான் கிடைத்தது. அப்பொழுதுதான் யோகர் சுவாமிகள் சொன்ன வார்த்தையின் உண்மை அர்த்தம் விளங்கியது. பாரதி அவர்களும் அதை ஏற்றுப் படித்ததனாலேதான் அவருக்குப் பெரும் புகழும் செல்வமும் கிடைத்தது என்பதைப் பலர் அறிவர். சித்தர்களின் அருள்வாக்கிலேதான் எவ்வளவு உண்மை!



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவக் கல்லூரியிலே தனது மேற்படிப்பைத் தொடர்ந்த பாரதி திறமைச் சித்திபெற்று பல்மருத்துவக் கல்லூரியிலே உதவி விரிவுரையாளராக மூன்று ஆண்டுகள் பணிபுரிந்ததுடன் பல் மருத்துவத்தின் நவீன சிகிச்சை முறைகளிலே நன்கு பயிற்சிபெற்ற ஒரு பல்மருத்துவராக யாழ்ப்பாணப் பொது அரசாங்க மருத்துவசாலையிலே சேர்ந்து அங்கும் மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். அந்தக் காலத்திலே அரச உத்தியோகத்தைத் தக்கவைப்பதற்கும் சம்பள உயர்வு பெறுவதற்கும் ஒருவர் சிங்கள மொழியிலே தேர்ச்சி (குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்) பெற்றிருக்கவேண்டும். தமிழ்ப் பற்று மிகுந்த பாரதி சிங்களம் கற்க விரும்பவில்லை. அதனால் யாழ். அரசினர் மருத்துவசாலையிலே மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததும் இவர் தனது வேலையை இழக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆனால் இந்தக் குறுகிய காலத்திற்குள் வட மாநிலத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தனது பல்மருத்துவத் திறமைதனை நிலைநாட்டிப் புகழை ஈட்டியிருந்ததால் சிங்களம் படிக்காத ஒரே காரணத்திற்காக வேலையை இழந்திருந்தும் தனது ஆளுமையிலே திட நம்பிக்கையுடன் தனிப்பட்ட பல் சிகிச்சை நிலையத்தை ஏற்படுத்தி 15ஆண்டுகள் அதிசிறந்த பல்மருத்துவராகப் பணியாற்றினார். இவரிடம் பல்சிகிச்சை பெற்ற ஆயிரமாயிரம் நோயாளிகள் இவரின் திறமைதனை பாராட்டிப் புகழாரஞ் சூட்டி வந்தமை இவருடைய காலத்திலே அங்கு இருந்தோருக்குத் தெரியும்.

உலகப் பிரசித்திபெற்ற சமூகத் தொண்டு நிறுவனமாகிய சர்வதேச றோட்டரி அமைப்பிலே ஈடுபாடு கொண்டு யாழ்ப்பாணம் றோட்டரிச் சங்கத்திலே அங்கத்தவராகி 1971முதல் 1984வரை பல பொறுப்பான பதவிகளை வகித்துப் பல புதிய புதிய திட்டங்களை வடிவமைத்து அவற்றைத் திறம்படச் செய்துமுடித்ததைத் தொடர்ந்து சர்வதேச றோட்டரி அமைப்பின் சிக்காக்கோ தலைமை அகத்திலிருந்து உலக றோட்டரி அமைப்பின் தலைவரின் தனிப்பட்ட பாராட்டுகளையும் பெற்றவர்.

இவர் யாழ்ப்பாணத்திலே பணிபுரியும் காலத்திலே இயற்றிய 10க்கும் மேற்பட்ட இசைச்சித்திரங்களுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிலைய வாத்தியக் கலைஞர்கள் ஏற்ற இசையமைத்து ஒலிபரப்பியுள்ளனர். இவை இவருக்கு மேலும் புகழைக் கொடுத்தது. ஈழநாடு பத்திரிகையும் காரைநகர் தமிழ்ச் சங்கமும் இணைந்து ஏற்படுத்திய கவிதைப் போட்டியிலே 60க்கும் மேற்பட்ட கவிஞர்கள் பங்கேற்றனர். அப்போட்டியிலே முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றமை இவரின் கவிதை இயற்றும் ஆற்றலுக்குச் சான்றுபகர்ந்தது எனலாம்.

முதன்முதலாக யாழ்ப்பாணத்திலே வெகு சிறப்பாக நடந்தேறிய தமிழாராய்ச்சி மகாநாட்டிலே இவர் பல வழிகளாலும் பணிசெய்தவர். இவரின் அசாத்தியத் திறமைகளை நேரிலே கண்டறிந்த யாழ். மாநகரசபை விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. சிவஞானம் அவர்கள் மாநகரசபையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்திற்காகப் பத்து நாட்களும் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் பொறுப்பினைக் கலாநிதி பாரதியிடம் கையளித்திருந்தார். கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யக்கூடாது என்றும் கலை நிகழ்ச்சி ஒன்றுகூட நடத்த விடமாட்டோம் என்றும் அதை மீறி ஒழுங்கு செய்தால் பெரும் விழைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்றும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்றும் பல மிரட்டல்களும் அச்சுறுத்தல்களும் சிலரிடம் இருந்து பாரதி அவர்களுக்கும் கலைஞர்களுக்கும் விடுவிக்கப்பட்டன. உயிரைப் பணயம் வைத்துப் 10 நாள் நிகழ்ச்சிகளையும் தனிமனிதனாக நின்று ஒழுங்குசெய்து வெற்றிகரமாக ஒப்பேற்றியவர் பாரதி. 10 நாள்களும் சிறப்பாக நிகழ்ச்சிகள் நடைபெற்றுப் பாரதி அவர்களுக்குப் பெரும் புகழைக் கொடுத்தது.

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 78
Psychosocial Educational Series - 78
VASANTHAM HEALTH & WELLNESS CENTRE
புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் வாழுமா?
Extinction of Tamil in the Diaspora
17 June 2024 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)
Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

Prof. Seetha Lakshmi
Tamil Educator, Singapore

Thushyanthi Gunaratnam
Diploma in Computer Studies,
Radio/TV News Presenter and Host,
Tamil Language Teacher,
Manager - Vasantham Tamil Wellness Centre
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!

Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

# செல்லும் இடங்களில் எதிர்கொள்ளும் இழப்புகளுக்கும் நட்டஈடு வழங்கத் தயாராகவுள்ள வீட்டுக் காப்புறுதி

வீடுகள் என்ற சொத்தின் பாதுகாப்புக்காக கனடாவில் எல்லோரும் நிச்சயமாக காப்புறுதி உடன்படிக்கைகள் செய்து வைத்திருப்பர். அந்தக் காப்புறுதி உடன் படிக்கையில் பலவகையான பாதுகாப்புகள் உள்ளடக்கப்பட்டிருப்பதனை காப்புறுதிப் பத்திரங்களிலும் படித்திருப்பர். காப்புறுதி முகவரும் அவைபற்றி தெளிவு படுத்தியிருப்பார். அங்கு குறிப்பாக:

* வீடுகளுக்குள் உள்ள உடமைகளுக்கு இழப்புகள் ஏற்பட்டால் காப்புறுதிக் கம்பனியிலிருந்து நட்டஈடு பெறலாம் என்ற பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

* அதேபோல் வீட்டில் இருப்போரின் தெரியாத்தனமாக செய்யும் தவறுகளினால் ஏனையோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு, பாதிக்கப்பட்டவர் சட்ட ரீதியாக நட்டஈடு கோர முயலும்போது அதனையும் தங்கள் சார்பில் தங்களின் வீட்டுக் காப்புறுதிக் கம்பனியே கையாளும் என்ற பிரிவும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இதனை ஆங்கிலத்தில் 'Home legal liability coverage' எனக் குறிப்பிடப்படும்.

இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்போவது என்னவென்றால் கனடாவிலிருந்து வேறு இடங்களுக்கு செல்லும்போது தற்காலிகமாக தங்கிக்கொள்ளும் இடங்களில், ஏதாவது பெறுமதிமிக்க தங்களின் உடமைகளுக்கு இழப்புகள் ஏற்பட்டால், கனடாவுக்கு திரும்பி வந்ததும் இழப்புகளுக்குரிய சட்டரீதியான ஆதாரங்களினைக் காட்டி இதே தங்களின் வீட்டுக் காப்புறுதியில் நட்டஈடு பெறலாம்.

அதேபோல் தற்காலிகமாக சென்று தங்கியிருக்கும் இடங்களில் தங்களின் தெரியாத்தனமான செயல் இன்னொரு வருக்கு இழப்பினை ஏற்படுத்தி அவர் தங்களுக்கு எதிராக முன்னெடுக்கும் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கும் இதே கனடாவில் உள்ள தங்களின் வீட்டுப் பொறுப்பு காப்புறுதிப் பிரிவு கை கொடுத்து உதவிசெய்து பாதுகாத்துக் கொள்ளும்.

கனடாவில் தாங்கள் வைத்திருக்கும் வீட்டுக் காப்புறுதிகள் பின்வரும் ஆபத்து களுக்குக் கைகொடுத்து உதவுகின்றது.

* வீடு என்ற தங்களின் மிகப் பெரிய சொத்துக்கு, மற்றும் அதனுடன் இணைக் கப்பட்ட உடமைகள் (Garage, Deck, Porch, Swimming pool போன்றவை) யாவற்றுக்கும் தீயினால் அல்லது வேறு இயற்கை அனர்த்தங்களினால் அழிவு ஏற்பட்டால் முழுமையான இழப்பீடு கிடைக்கின்றது.

* இத்தகைய இழப்புகளின்போது தற் காலிகமாக இடப்பெயர்வு செய்து வாழும் சகல செலவுகளுக்கும் நட்டஈடு செய்யப்படுகின்றன.

* இயற்கை அனர்த்தங்களினால் அழிந்த அல்லது திருட்டுகளுக்குள்ளான வீட்டின் உடைமைகள், யாவற்றுக்கும் உடன்படிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்குள் இழப்பு நிவாரணம் பெறலாம்.

* தங்களின் தெரியாதனமான தவறில் ஏனையோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றது.

குறிப்பாக சொல்லப்போனால் வீட்டுக் காப்புறுதி உடன்படிக்கைகள் வைத்திருந் தோர் கனடாவில் பாதிப்புகளின்போது பல இடங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளனர். காப்புறுதி உடன்படிக்கைகள் இல்லாதோர் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

# மோடிக்கு ...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ஐந்து இந்தியப் பிராந்திய மொழிகளில் தனது மொழிமாற்ற காணொளிகளை வெளியிடுவதற்கான ஐந்து புதிய யூடியூப் சேனல்களை ஏப்ரல் 18, 2024அன்று ரத்தே தொடங்கினார்.

இந்தியாவின் பெரிய ஊடக நிறுவனங் களே மோடியை விமர்சிக்கப் பயப்படும் போது தனி ஒருவனாக துருவ் செய்வதை சும்மா பார்த்துக் கொண்டிருப்பார்களா; அவருக்கும் அச்சுறுத்தல்கள் வந்தன. 2020ஆம் ஆண்டில், இந்தி நடிகை கங்கனா ரணாவத்தின் அறிக்கைகளை விமர்சித்து காணொளியை வெளியிட்டதற் காக அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டியது குறிப்பிடத்தக்கது.

2022 செப்ரெம்பரில் பாகிஸ்தானின் அரசி யல் நெருக்கடி குறித்து ரத்தே வெளியிட்ட காணொளியை இந்தியாவின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் முடக்கியது. அதில், இந்தியாவின் சிதைந்த வரைபடம் இருப்பதாகவும், அதில் காஷ்மீரின் சில பகுதிகள் பாகிஸ்தானின் பகுதியாக அல்லது 'சர்ச்சைக்குரியதாக' சித்தரிக்கப்பட்டுள்ள தாகவும் இந்திய அரசு கூறியது.

தொடர்ந்து, துருவ் ரத்தே மனைவி ஜூலிக்கு பாலியல் வன்கொடுமை அச்சுறுத்தல் அனுப்பப்பட்டது. இவருடைய காணொளிகளை தன் பக்கத்தில் பகிர்ந்த டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது, அதற்கென வழக்குப் பதியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாஜகவுக்கும் மோடிக்கும் எதிராகக் களமாடிய தனி நபராக இவ்வுலகம் துருவ் ரத்தேயை பார்க்கிறது எனினும், அவர் தனி நபர் அல்லர். அவருடைய



காணொளிகளைப் பார்க்கும் எவரும் இதைப் புரிந்துகொள்ள முடியும். அவருக்குப் பின்னால் ஒரு குழு இயங்குகிறது. விஷுவல் எடிட்டர்கள், வரைகலை நிபுணர்கள், விடயங்களை அலசி ஆராய்ந்து தரவுகளை எடுத்துத்தரும் வல்லுநர்கள் என 15 பேர் கொண்ட குழு இயங்கி வருகிறது. இக்குழு இந்தியாவிலிருந்து இயங்கினா லும், துருவ் ரத்தே ஜெர்மனியில் இருக்கிறார். அவர் அளித்துள்ள எந்தப் பேட்டியிலும், தனக்காகப் பணியாற்றும் எவர் ஒருவரின் அடையாளத்தையும் அவர் தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு சிக்கல்கள் எதுவும் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்.

ஜெர்மனியில் வாழ்வதாலேயே துருவ் ரத்தேவால் இவ்வளவு செயல்பட முடிகி றது. ஆனாலும், ஆபத்துகள் இருப்பதை மறுக்க முடியாது. இருந்தபோதிலும் ரத்தே கலங்காமல் தொடர்ந்து காணொளிகள் வெளியிட்டுக்கொண்டே இருக்கிறார்.

இந்திய தேர்தல் முடிவுகள் வெளியான அன்று, துருவ் வெளியிட்ட செய்தி முக்கியமானது. "ஒரு சாதாரண மனிதனின் சக்தியை எப்போதும் குறைத்து மதிப்பிடா தீர்கள்" (Never underestimate the power of a common man) என்கிறார் துருவ் ரத்தே. இது மோடிக்கு மட்டுமல்ல, அனைத்து ஆட்சியாளர்களுக்குமானது.

## திருக்குறளின் அதிசயங்கள்

- திருக்குறளில் தமிழ், என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை,
- திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42,194
- திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 - ல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை
- திருக்குறளில் இடம் பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை
- திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை - குன்றிமணி
- திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ
- திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி (1705)
- திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ , ஙு
- திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது
- திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது
- திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்






# கம்போடிய...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த வெற்றி அவரின் துணிச்சலுக்கும் நிருவாகத் திறமைக்கும் சான்றாகியது.

தன்னிகரற்ற பல்மருத்துவராகப் புகழுடன் இருந்தும் நாட்டு நிலைமை காரணமாக 1984ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்குப் புலம் பெயர்ந்து அங்கு ஊட்டியிலேயும் கோத்த கிரியிலும் பல்சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்திப் பத்து ஆண்டுகள் வெற்றிகரமாகப் பணியாற்றினார்.

ஊட்டியிலே தொழில் செய்துவந்த பத்து ஆண்டுகளும் உதகை றோட்டறிச் சங்கத்திலே பல பதவிகளை வகித்தார். இவர் சமூகசேவை இயக்குநராக இருந்த மாவட்ட றோட்டறிப் பிரிவிலுள்ள 81 றோட்டறிச் சங்கங்களுக்குள்ளே அதி சிறந்த சமூக சேவைக்கான மூன்று விருதுகளை (Outstanding Community Service District Awards) ஆளுமையை வெளிப்படுத்தியது.

யாழ்ப்பாணத்தில் இவர் பணியாற்றிய காலத்தில் இவரது சேவைகளையும் தமிழ்ப்பணிகளையும் பாராட்டி ஊக்கப் படுத்திய தமிழறிஞர்களில் இயலிசை வாரிதி பிரம்மசிறீ வீரமணி ஐயர், வைத்தீஸ்வரக் குருக்கள், அரசாங்க அதிபராக இருந்த யோகேந்திரா துரைசாமி, சிவகுருநாத செட்டியார், வித்துவான் ஆறுமுகம், பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் சிவத்தம்பி, கனக செந்திநாதன், வித்துவான் வேலன், வித்துவான் கா. பொ இரத்தினம், எழுத்தாளர் வரதர் பொன். முத்துக் குமாரன், சிவப்பிரகாசபிள்ளை, பண்டிதர் மயில்வாகனம் போன்றோர் குறிப்பிடத்தக்க வர்கள். ஊட்டியிலே (தமிழ் நாடு) பத்து வருடங்கள் பணிபுரிந்த காலத்திலே தமிழ்நாட்டைச் சேர்ந்த பத்மசிறீ அவ்வை நடராசன், பேராசிரியர் பசுவலிங்கம் கே. ரி. திருநாவுக்கரசு (இயக்குநர் தமிழாராய்ச்சி நிறுவனம்) திருக்குறள் முனுசாமி போன்ற பல தமிழ் அறிஞர்களும் தன்னை ஊக்குவித்தும் பாராட்டியும் வந்துள்ளனர் எனவும் இவர் கூறுவதுண்டு.

பிற மொழிக் கலப்பில்லாது தமிழை எழுது வதையும் பேசுவதையும் பெரிதும் விரும்பிச் செயற்பட்டுவரும் பாரதி அவர்கள் எதுவித பலனையும் எதிர் பார்க்காது பல அமைப்புகளுக்கும் தனிப்பட்ட நண்பர்களுக்கும் தூய தமிழை எழுதுவதற்கு உதவிசெய்து வருவது பலருக்குத் தெரிந்ததொன்றாகும். அவுஸ் திரேலியாவிலே தமிழ்ப் பட்டதாரிகள் சங்கத்தினால் பல வருடங்களாக வெற்றி கரமாக நடத்தப்பெற்று வருகின்ற தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளைச் சிறப்பாக நடத்துவதற்கு கலாநிதி பாரதி அவர்கள் பரீட்சை அதிகாரிகளில் ஒருவராகக் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.



அவரது தாத்தாவாகிய நவாலி ஊர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் இயற்றிய நூல்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அவற்றில் முக்கியமான பல நூல்களை மறுபிரசுரம் செய்து வெளியிட்டு வருகிறார்.

அவுஸ்திரேலியா வந்தபின்னர் பலவித சமூகப் பணிகளிலும் சைவப் பணிகளிலும் தமிழ் ஊக்குவிப்புத் திட்டங்களிலும் பெரும் பங்கேற்றுவரும் பாரதி அவர்கள் ஒபன் தமிழர் கழகம் (இப்பொழுது கம்ப லாந்து தமிழர் கழகம்) ஆரம்பிப்பதற்கு வழிவகுத்த ஐவரில் ஒருவராவர்.

தமிழ் வளர்த்த சான்றோர் விழாக்களாக 2013ஆம் ஆண்டிலிருந்து 2019ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் பெருவிழாவாக நடத்துவதற்கு விழா அமைப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். இதுவரை 16 தமிழறிஞர்களுக்கு விழா எடுக்கப் பெற்றுள்ளது பலரும் அறிந்ததே!.

உலக இலக்கியத் தமிழ் மகாநாடு, திருக்குறள் மகாநாடு, சிலப்பதிகார மகாநாடு, கவி அரங்குகள் கருத்தரங்கு கள் போன்றவை அமைப்பதில் முக்கிய பங்கேற்றமை, பல கவி அரங்குகளுக்குத் தலைமை ஏற்றுச் சிறப்புச் செய்தமையும் இவரின் பணிகளில் அடங்கும்.

## இவர் இயற்றிய நூல்கள்

அருள்மிகு சிட்னி முருகன் திரு ஊஞ்சல், பிளெமிங்ரன் அருள்மிகு விநாயகர் திரு ஊஞ்சல், றீயன்ஸ் பார்க் அருள்மிகு துர்க்கை அம்மன் திரு ஊஞ்சல், ஹெலன்ஸ்பேக் அருள்மிகு சிவன் திரு ஊஞ்சல், ஹெலன்ஸ்பேக் அருள்மிகு வெங்கடேசர் திரு ஊஞ்சல், கன்பரா அருள்மிகு ஆறுபடை முருகன் திரு ஊஞ்சல், விக்ரோறியா கரம்டவுன்ஸ் அருள்மிகு சிவன் திரு ஊஞ்சல், விக்ரோ றியா அருள்மிகு வெங்கடவரதர் திரு ஊஞ்சல், விக்ரோறியா சன்சைன் அருள்மிகு முருகன் திரு ஊஞ்சல், விக்ரோறியா றொக்பாங் அருள்மிகு முருகன் திரு ஊஞ்சல், விக்ரோறியா பேசன் அருள்மிகு வத்திரதுண்ட விநாயகர் திரு ஊஞ்சல், அருள்மிகு சக்தி திரு ஊஞ்சல், அருள்மிகு திருமுருகன் திருப் பள்ளி எழுச்சி, அருள்மிகு விநாயகர் திருப்பள்ளி எழுச்சி, எண்பது குழந்தைப் பாடல்கள் கொண்ட சிறுவர் செந்தமிழ்.

அண்மையில் வெளியான புத்தகம் - சிவஞானச் சித்தர் தவத்திரு சிவயோகர் சுவாமிகள்.
'சூரிய வழிபாடும் கோளறு பதிகமும்' என்னும் நூலுக்கு உரை

தன்னலமற்ற தனிப்பட்ட சமூக சேவைகளையும் சர்வதேச றோட்டறிச் சங்கங் களின் மூலமாக ஆற்றிய சமூக சேவைகளையும் தமிழ்ப் பணிகளுக்கு அவர் 50 ஆண்டுகளாக ஆற்றிய பங்களிப்புகளை யும் அவரின் சைவசமயப் பணிகளையும் பரிசீலனை செய்தபின்னரே பல அமைப்புகள் விருதுகளை அளித்துள்ளன.

அவற்றுள் முக்கியமானவை தமிழ் அறிஞர் விருது, முத்தமிழ் வித்தகர் விருது, திருமந்திரச் சுடர் விருது, சிவஞானச் சுடர் விருது, சிவஞான சித்தியார் செம்மல் விருது, தெய்வீகச் சுடர் விருது போன்றவற்றை ஆகும்.

மேலே குறிப்பிட்ட சேவைகளின் அடிப்ப டையில் அகில அவுஸ்திரேலியக் கம்பன் கழகம் கலாநிதி பாரதி அவர்களுக்கு சான்றோர் விருதினை 2016ஆம் ஆண்டிலே கோலாகலமாக நடந்த கம்பன் விழாவிலே அளித்துக் கௌரவித்தது. ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கம்ப வாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களும் அரங்கு நிறைந்த அவை யினரும் குழுமியிருந்த கம்பன் விழாவிலே இந்த விருது அளிக்கப்பெற்றது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் பாரதி அவர்களுக்கு கம்போடிய அரசின் பண்பாடு மற்றும் நுண்கலை அமைச்சின் உயர் விருதான வாழ்நாள் சாதனை விருது (Lifetime Achievement Award) வழங்கப் பெற்றது.

எவ்வளவோ விருதுகள் கிடைத்தாலும் பாரதி அவர்களுக்குப் பெரும் மனத் திருப்தியைக் கொடுப்பது என்னவென்றால் அவுஸ்திரேலியாவிலுள்ள முக்கிய கோயில்களுக்கு அவர் திரு ஊஞ்சலை இயற்றிக் கொடுத்ததுதான். அவர் இயற்றிக் கொடுத்த எல்லாத் திரு ஊஞ்சல்களும் அந்தந்தக் கோயில்களிலே திருவிழாக் காலங்களிலே இசையுடன் பாடப்பெற்று வருவதுதான் பெருமகிழ்ச்சி யைக் கொடுப்பது என்று அறிகிறோம்.

வாழ்நாள் சாதனை விருதைப் பெற்ற கலாநிதி பாரதி அவர்களை தமிழ் மூத்த பிரசைகள் சங்கம் சில மாதங்களுக்கு முன்னர் அதன் வாராந்தக் கூட்ட மொன்றில் கௌரவித்துச் சிறப்புச் செய்தது.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்டு நல்லதொரு சாரதி போன்று இந்தச் சங்கத்தை வழிநடத்திவரும் செந்தண்மை பூண்ட திருமதி சறோயினி சுந்தரலிங்கம் அவர்கள் பாரதி அவர்களைப் பற்றிய பல செய்திகளைக் கூறி அவரைப் பாராட்டிக் கௌரவித்தார்.

இதேபோல அவுஸ்திரேலிய மூத்த தமிழர் சங்கத்தின் செயற்குழு அதன் வாராந்தக் கூட்டத்திலே இவரைக் கௌரவித்தது.

திரு பஞ்சாட்சரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு சிவா வரதன் அவர்கள் பாரதி அவர்களைப் பற்றிய அறிமுகத்தை அழகுறச் செய்தார். வரதன் அவர்கள் தனக்கே உரிய தனித்துவமான கணீரென்ற குரலிலே ஆற்றிய உரை கூட்டத்திற்கு மெருகூட்டியது.






